
# சாளரம்

மார்ச்-ஏப்ரல் 1992

விலை 12 ரூபா

மார்ச் 8
அனைத்துலக பெண்கள் தின
சிறப்பிதழ்



ஆண்-பெண் சமத்துவம்...?

இளையோர் திங்கள் இதழ்

## தெறிப்பு

சாளரம் சஞ்சிகையைத் தொடர்ந்து படித்துவருகிறேன். தரமான அதேநேரத்தில் வித்தியாசமான விடயங்களுடன் சாளரம் வெளிவருவதில் மகிழ்ச்சி. முன்னைய இதழ்களில் காணப்பட்ட 'கடுமை' சற்றுக் குறைந்து வாசிப்பதற்கு இலகுவான முறையில் கட்டுரைகள் அமைந்துள்ளன.

— மு. ரவீந்திரன்
கொக்குவில் மேற்கு

பாடத்திட்டத்திற்குள் அமைந்த விடயங்களை மட்டும் படித்து வந்த நாங்கள் வேறு விடயங்களையும் தெரிந்து கொள்வதற்கு சாளரம் உதவுகிறது பரீட்சைக்காகப் படிக்கும் நூல்களைப் போன்றே சாளரத்திலுள்ள கட்டுரைகளையும் அவதானமாகப் படிக்கும் பழக்கம் மாணவர்களிடம் ஏற்பட்டு வருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

— சா. சுந்தரேஸ்வரன்
கல்மடு

பெப்ரவரி மாத சாளரம் படித்தேன் அட்டைப்படம் உட்பட உள்ளே காணப்பட்ட அனைத்து அம்சங்களும் கருத்துள்ளனவாக இருந்தன.

சாளரத்தின் பணிதொடர வாழ்த்துக்கள்.

— திருமதி. மா. இராமநாதர்
பருத்தித்துறை.

சாளரத்தில் வெளியாகும் பல் துறை சம்பந்தப்பட்ட விடயங்களை இதே முறையில் தொடர்ந்து கொண்டு வரவும். பல்துறை சம்பந்தப்பட்ட ஒரேயொரு இதழாக தற்போது சாளரம் மட்டுமே வெளியாகிறது.

— வி. கோகிலநாதன்
இணுவில்

'சாளரம்'
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளே...

- பண்பாடு அகதியாகிறது
- இலங்கையின் கல்விக் கொள்கை சர்வதேச வர்த்தகர்களின் கைகளில்
- ஆசிரியர் தலையங்கம்
- நிலாமுற்றம்
- அரும்புகள்
- உலகத்தை உறிஞ்சும் பண முதலைகள்
- போரும் அதற்கவசிய நிறுவன கட்டமைப்புகளும்
- நிறம் மாறும் இலைகள்
- பகலவன் பதில்கள்
- சடுகுடு
- ஆசிரியன் சமூக மனிதன்
- அதிசயமென்ன?
- பெண் விடுதலை
- உலக சமாதானமும் ஐரோப்பிய பெண்களும்
- ஒரே கேள்விகள் - மூவர் பதில்கள்

# பண்பாடு அகதியாகிறது

1992ம் ஆண்டு மாசித்திங்கள் 5ம் நாள்; காலைவேளை மடுக்கோயில் வீதியில் நடக்கின்றேன்-

மடுக்கோயில்.

அது ஒரு புனிதத்தலம். ஆனால் இன்று இருபத்திஆறாயிரம் மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து நிற்கிறது.

சோம்பிக் கிடக்கும் மக்கள் கூட்டம்; மாறுகின்ற பண்பாடுகள்; குழம்பிப்போன கோலங்கள் ......

மனிதன் பறவையில்லையே! அவனுக்கு அறிவு ஆறு என்று சொல்கிறார்கள்.

கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லாருமே ஒரு சேரிக்குள் ... ... பண்பாட்டை எப்படிக்காப்பது?

கேள்விக்குறியொன்று மிகப்பெரிதாக எழுந்து நின்றது


'அகதிகள்' ... இந்தப்பெயர் இவர்களுக்கு பொருத்தமற்றது போலவே தோன்றியது.

களாய் ...... மழையில் ... வெய்யிலில் எத்தனை மக்கள்.

பாலுக்காய் அழும் குழந்தை .. முலைவற்றிப் போன தாய் ...... அவளது இயலாமையின் கண்ணீர் ......, தாங்கமுடியாத வேதனைகள்.

இருந்த பிள்ளைகளை எல்லாம் களத்துக்கு அனுப்பி, காத்திருந்து விடுகின்ற ஏக்கப்பெருமூச்சுக்கள்... யார் அகதிகள்?

வீதி நெடுகிலும் பூசி பொட்டு வைத்து யாரையோ எதிர்



வீதியின் இருமருங்கிலும் பெருநாள்காலத்தில் வந்துசேரும் பெட்டிக்கடைகள் போல் ...... ஆனால் இவை பெட்டிக் கடைகளல்ல; பெட்டி வீடுகள்; ஏழாயிரம் குட்டி வீடுகள்.

குருவிகள் கூட முட்டையிடும் காலத்தில், கூட்டில் தனித்தே வாழ்கின்றன. காகங்கள்கூட மனிதர்கள் காணாமல்தான் புணர்கின்றன.

மடிப்பு குலையாத உடுப்பு பவுடர் குறையாத முகம் அந்தஆலயத்தை சுற்றி வீதியில் விசிலடித்தபடி ஒரு சைக்கிள் ஓட்டம்.

**மணலாறு விஜயன்**

இவர்களெல்லாம் அகதிகளாயின் கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் ... மரத்தின் இலைகளே மறைவிடங்

பார்த்து... சுற்றும்முற்றும் பார்க்கிறேன். எவரையும் காணவில்லை. சில கணந்தான் சைக்கிளில் நாலைந்து இளசுகள் விசிலடித்தபடி ......

ஏக்கப்பார்வை; தேக்கப் பெருமூச்சு; மாற்றுக் குறியீடுகள் ...... மறைகிறார்கள் குறியீட்டுக்குள் மறைந்து அழிந்து போகும் பண்பாடுகள்......

மௌனமாக சிறிதுதூரம் நடந்தேன்.

நீண்ட வரிசையொன்று, தண்ணீர் குடங்களோடு காத்து நின்றார்கள். குடிநீர் அந்தக் குழாயில் தான் வருகிறது போலும், அந்தக் குழாய்க்கு பேசும் சக்தியிருந்தால் ..... பார்க்கும் சக்தியிருந்தால் பல கதைகள் சொல்லியிருக்கும்.

அங்கே என்னைத் தெரிந்த முகமொன்று மெல்ல நழுவுவதைக் கண்டுகொண்டேன். கையில் தட்டிக் கூப்பிட்டேன். வளைந்து நெளிந்து முன்னே வந்து நின்றான்.

''என்ன மச்சான் நெளியிறாய். நீயும் இஞ்சைதான் நிற்கிறாயா'' என பேச்சை தொடக்கினேன்.

''வேற என்னடாப்பா செய்யிறது ஊருக்கு போகேலாதுதானே''

ஏன் மச்சான் ஆமி இல்லாத இடமாய்ப்பாத்து ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டிருந்தால் வசதியாயிருக்குந்தானே, இதுக்க கிடந்து ஏன் கஸ்ரப்படோணும்?''

''இஞ்சை கஸ்டமெண்டு இல்லடாப்பா. எல்லா வசதியும் இருக்கு ஒரு பிரச்சனையுமில்ல.

எல்லா வசதிகளும் ...... பிரச்சனையுமில்ல ......

சிலகணம் சிந்தித்தேன் பல உண்மைகள் புரியத் தொடங்கின.

''வாடாப்பா ஏதும் குடிச்சிட்டு போவன்'' என்று என்னை அழைத்துச் சென்றான். பேசிக்கொண்டே நடந்தோம்.

''என்ன இந்தப் பக்கம் இருந்தாப் போல வந்திருக்கிறாய். நீ சும்மா வந்திருக்கமாட்டியே'' என்று என்னைஅறியும் நோக்கில் கேள்வியைக் கேட்டான்.

''மடு முகாமைப் பார்க்கோணுமெண்டு ஒரு ஆசை நீண்ட நாளாய் கிடந்தது. அதுதான் சும்மா பாத்திட்டு போவமெண்டு வந்தன்; ஏன் வரக்கூடாதோ மச்சான்.'' பதிலுக்கு நானும் போட்டுவைத்தேன்.

''அதுசரி மச்சான் எல்லா வசதிகளும் இஞ்ச கிடைக்குதெண்டாய் அப்பிடி என்ன வசதிகளெண்டு சொல்லன்.''

''அரிசி, மா, சீனி மண்ணெண்ணெய் என்று கிழமைக்கொருதரம் செஞ்சிலுவை சங்கத்தால தாறாங்கள். அதைவிட வேறசில அமைப்புக்களும் கிழமைக்கொருக்கா சாமான்கள் தருவார்கள். இதைவிடவேற என்ன வேணும்''

வயிறு நிரப்புவதுதான் தேவை அவனின் குறுகியபார்வை எனக்கு சினத்தைக் கொடுத்தது. ஆனாலும் மௌனமாக இருந்து விட்டேன்.

''அப்ப, வேற இடங்கள்ள வீடு கட்டி தந்தாலும் போகமாட்டியள் போல கிடக்கு'' என்று கிண்டலாக கேட்டேன்.

''பிரச்சினை தீர்ந்தால் வீட்டுக்கு போறது; மற்றும்படி இஞ்சதான் இருக்கிறதாய் முடிவு; என்று கூறியவன் இதுதான்ராப்பா என்ர குடிசை. என்று ஒரிடத்தை சுட்டிக் காட்டினான்.

நான்குபேர் படுத்து எழும்பலாம். அதற்குள்ளேயே சமையல், அதுக்குள்ளேயே குடும்பம் ... படுக்கை...

''அதுசரி மச்சான், பிள்ளையளோட இதுக்க நித்திரைகொள்ள இடம் காணுமே.''

''காணாதுதான், ஒரு மாதிரி சமாளிச்சுக்கொள்ளுறம்.''

தேசிக்காய் தண்ணீர் ஒரு டம்லர் வந்தது, குடித்தேன்.

''பிள்ளையள் சிலமனைக் காணேல்ல. எங்க போட்டினம்''

''எல்லாம் பள்ளிக்கூடம் போட்டுதுகள்''

''பள்ளிக்கூடமும் நடக்குதோ, எங்க நடக்கிறது.''

''கோயிலுக்கு முன்னால நிக்கிற மரங்களுக்கு கீழதான் நடக்குது.''

''மழைவந்தால் கஸ்ரமாக இருக்குமே''

''உண்மைதான். ஒவ்வொரு மரங்களுக்கு கீழேயும் ஒவ்வொரு பிளாஸ்ரிக் விரிப்புக்கள் கிடக்குது; மழைபெய்தால் அதை தூக்கிபிடித்துக் கொண்டு, அதுக்குக் கீழே நிற்கவேண்டியதுதான்; ஆகலும் கஸ்டமெண்டால் விட்டிட்டு ஓடி வரவேண்டியதுதான்.''

அவனிடம் விடைபெற்றுக் கொண்டு ஆலயத்தின் முன்னே வந்தேன்.

ஆலயத்தின் முன்னே அமைந்த மேடையின் விளிம்பில் சில இளைஞர்களும் யுவதிகளும் தம்மை மறந்து சல்லாபித்துக்கொண்டிருந்தனர்.

முன்னே இருந்த மரத்தின்கீழ் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். மரத்தின் அடியை சுற்றி புத்தக அடுக்குகள்.

அப்படியாயின் இவர்கள் ஆசிரியர்களாகத்தான் இருக்க வேண்டும்.

இடத்துக்கு வித்தியாசமான என்னைக்கண்டதும் தத்தம் மரங்களுக்கு கலைந்து சென்றனர்.

எல்லா வசிக்காகவும் எதிர்கால குழந்தைகளையல்லவா - பலியாக்குகின்றார்கள். கல்வியில் நிச்சயமாக இந்தக் குழந்தைகள் அகதிகளாகவே வாழப்போகிறார்கள். வரலாற்றுப்புகழ்மிக்க ஆலயத்துக்குள் சென்றேன். அமைதி நிலவியது. யேசுநாதரின் வரலாற்றைச் சித்தரிக்கும் சிற்பங்கள் வரிசைக் கிரமமாக வைக்கப்பட்டிருந்தன.

யேசுநாதரே இங்கே நடக்கும் சீரழிவுகளை மன்னிக்க மாட்டார்.

ஆலயவளவைவிட்டு பின்புறவீதியாக நடந்துகொண்டிருந்தேன். அந்த வீதியின் அருகே சிறிய பேருந்து ஒன்று நின்றது. பலர் அதில் ஏறுவதும் இறங்குவதுமாக நின்றார்கள். ஆனால் அது ஓடுவதில்லைட்போல் தெரிந்தது. ஏனெனில் அதிலிருந்து ஒரு சிறிய ஒத்தாப்பும் கீழே இறக்கப்பட்டிருந்தது.

தனது வயதில் முக்கால்பகுதியை அந்தபஸ் கடந்துவிட்டதை அதன் உருவ அமைப்பு காட்டியது.

ஓடிவரும்போது; அதைஓடிட்த்தான் வந்திருக்கிறார்கள். வந்த இடத்தில் எல்லாவசதியும் கிடைத்துவிட்டது. வீடுதான் சிறப்பாக இல்லை. டீசலும் கொஞ்சம் விலையாக இருந்தது. அதனால் பேருந்தினையே வீடாக்கிவிட்டார்கள் போலும். பேருந்துள் படுக்கை ஒத்தாப்புக்குள் சமையல், ஒருபிரச்சனையுமில்லை .....

மீண்டும் ஒருதடவை ஓடவேண்டிவந்தால் ஆணியை முறுக்க வேண்டிதுதான்.

நடமாடும் வீடாய் மாறிக்கிடந்த அந்த பேருந்தினையும் அதற்குள் வசிக்கும் குடும்பத்தையும் நினைத்து சிரித்துக்கொண்டேன்.

ஓடி ஓடியே வயதுபோய், ஒருநாள் உடைந்துபோகும் இடத்தில் வீடுமின்றி ... வசதிகளுமின்றி ..... வாழ்வுமின்றி... வெட்கங்கெட்ட சீவன்கள், எப்பதான் உணரப் போகிறார்கள்.

மங்கிய மாலை நேரமாகிக் கொண்டிருந்தது. அந்த இடத்தை விட்டு விலகிவிடவேண்டுமென்ற கசப்பான உணர்வே மேலோங்கி நின்றது.

விரைவாக நடந்துகொண்டிருந்தேன்.

வீதியின் அருகே குப்பி விளக்கின் ஒளியில் அவசரமான வியாபாரங்கள் நடந்துகொண்டிருந்தன.

சீர்கெட்டவாழ்வு.

சொந்தமண் அழிகின்றபோது சோத்துக்கு வாழ்கின்ற ஒரு வாழ்வு தேவைதானா?...

எல்லா வசதிகளும் கொண்ட இந்த வாழ்க்கை எங்களின் பண்பாட்டை, எங்களின் தனித்துவத்தை, எங்கள் தேசத்தின் குழந்தைச்செல்வங்களின் எதிர்காலத்தை, குழி தோண்டிப் புதைக்கும் புதை குழிகள்.

இந்த உண்மையை அந்தமக்கள். என்றுதான் உணர்வார்களோ?

## 17 வயதில் மார்க்ஸ் எழுதியவை

**1835 ம் ஆண்டு ஆகஸ்டில் (தனது 17 ம் வயதில்) பள்ளிப் படிப்பு முடிந்து வெளியே செல்வதற்கு 'முன் ஒருவாழ்க்கைத் தொழிலை விரும்பித் தேர்ந்தெடுப்பதில் ஒரு இளைஞனின் பிரதிபலிப்புக்கள்' என்ற தலைப்பில் கார்ல் மார்க்ஸால் வரையப்பட்ட கட்டுரையின் சில வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அப்போது அவர் பகுத்தறிவு இயக்கத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தார்.**

''மனித குலத்திற்காக வாழ்நாளில் பெரும்பாலும் சேவை செய்வதற்கான வகையில் நமது வாழ்க்கையில் ஒரு நல்வாய்ப்பு நிலையை நாம் தேர்ந்தெடுத்து ஏற்பாடு செய்து கொண்டால் எத்தகைய சுமைகளும் பளுக்களும் நம்மை எதுவும் செய்துவிட முடியாது, பணிய வைத்துவிட முடியாது.''

''.. ஒருவர் தனக்காக மட்டும் வேலை செய்தால் அவர் ஒரு பெரிய படிப்பாளி என்றோ, பெரிய ஞானி என்றோ, ஒரு சிறந்த கவிஞர் என்றோ பெரும் புகழ் மிக்கவராகலாம் ஆனால் அவர் ஒரு புகழ்மிக்க உண்மையான மகான் ஆகமாட்டார்.''

''.. ஒரு வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் முக்கியமானது. ஏன் எனில் அதுதான் அவன் மனித குலத்திற்காகப் பணியாற்றுவதில் சிறந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடியதாகும்.''

''...நான் என்னும் அகங்காரத் தற்பெருமையாகிய குறுகிய சிப்பிக்குள்ளே சுருங்கிக் கொண்டிருக்க வேண்டாம். மனிதர்களுக்கு சேவை செய்வதற்கான வழிகளையும் சாதனங்களையும் தேடுவற்கு முயற்சி செய்.''

''...ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் ஒரு நிலைப்பாட்டைத் தேர்ந்தெடுத்து அந்தநிலை அவன் மனித குலத்திற்கு சிறந்த முறையில் சேவை செய்தற்கு இடமளிக்குமானால் அவர் நான் என்னும் தற்பெருமையுடன் கூடிய குறுகிய சொந்தசுகம் மகிழ்ச்சியைப் பற்றி அதிகமாக உணரமாட்டார். அதற்கு பதிலாக அவருடைய மகிழ்ச்சி கோடிக்கணக்கான மக்களுக்குச் சொந்தமாக இருககும்''

# இலங்கையின் கல்விக் கொள்கை சர்வதேச வர்த்தகர்களின் கைகளில்

இலங்கை அரசின் கல்விக் கொள்கையானது சுதேச மக்களின் நலன்களுக்கு உகந்ததாய் அமையவில்லை. இலங்கையிற் கடைப்பிடிக்கப்படும் கல்விக் கொள்கையின் குறைபாடுகள் பற்றி கடந்த 50 ஆண்டுகளாக பெரும் விமர்சனங்கள் இடம்பெற்று வருகின்றன. மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அடிக்கடி இலங்கையின் கல்விக் கொள்கைகளை மாற்றியமைத்து வந்தன. கடந்த 15 ஆண்டுகளாக ஒரேகட்சி - ஐ. தே. க. - தொடர்ந்து ஆட்சியில் இருக்கின்ற போதிலும் அது பல தடவைகள் கல்வித் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணமே உள்ளது. பொதுவாக இலங்கையின் கல்விக் கொள்கை ஸ்திரமற்றது என்பதும், அது சுதேசிகளிற்கு பெரிதும் நன்மை பயப்பதாய் இல்லை என்பதும் உண்மை.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமது அரசியற் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஏற்ப கல்விக் கொள்கையிலும் மாற்றங்களைச் செய்து வந்தன. இலங்கையின் அரசியற் பொருளாதாரக் கொள்கையை யார் தீர்மானிக்கின்றார்களோ அவர்களே அதன் கல்விக் கொள்கையையும் தீர்மானிப்பார்கள் என்பது உண்மை. இனிமேல் இலங்கையில் கோலோச்சப் போகின்ற அரசியற் - பொருளாதாரக் கொள்கையை நோக்குவோமாயின் இலங்கை எத்தகைய கல்விக் கொள்கைக்கு உட்படப் போகின்றது என்பதையும் புரிந்து கோள்ளலாம்.

கெடுபிடி யுத்தம் முடிவடைந்த சூழலில் மேற்குத் தேசத்தின் தலைமையிலான சந்தை மையப் பொருளாதாரமே இன்று உலகப் பொருளாதாரத்தின் பொது அடிப்படையாக உள்ளது. இந்த வகையில் இலங்கை உலகச் சந்தை வர்த்தக மையங்களுள் ஒன்றாக உருப்பெற்று வருகின்றது. உலக வர்த்தக மையமாக இலங்கை நிகழ்வதற்கேற்ற கல்வி முறை இப்போது இலங்கைக்கு அவசியப்படுகின்றது. ஆதலினால் அதனைச் சார்ந்த ஒரு கல்விப் போக்கை இலங்கை வலுவாகப் பின்பற்ற உள்ளது என்று கூறலாம்.

உலக வர்த்தகத்தைச் சார்ந்த சேவைத் துறைக் கல்வியே இலங்கையின் கல்வி அமைப்பாக உருப்பெறும். வர்த்தகத்தை மையமாகக் கொண்ட சேவைத் துறையை நோக்கி சகல மூளைகளும் திசைதிருப்பப்படும், பயிற்றுவிக்கப்படும். சர்வதேச வர்த்தகர்களே இலங்கையின் அரசியற் - பொருளாதாரத்தை பெரிதும் நிர்ணயிப்பர். அவ்வாறாயின் இலங்கையின் கல்விக் கொள்கையை நிர்ணயிக்கப் போவதும் சர்வதேச வர்த்தகர்களே என்பதில் ஐயமில்லை.

ஆதலினால் சர்வதேச வர்த்தகர்களின் நலன்களுக்குச் சேவை செய்யக் கூடியவகையிலேயே இலங்கையில் வாழும் சிறார்களின் மூளைகள் உருவமைக்கப்பட உள்ளன.

உலக வர்த்தகத்தின் பொருட்டு தொலைதொடர்பு உலகளாவிய ரீதியில் இலங்கையில் விருத்திசெய்யப்பட வேண்டும். அதற்காக உலக வர்த்தகர்கள் தொலை தொடர்பை இங்கு பெரிதும் விருத்திசெய்வார்கள். எனவே இத்துறைகளான கல்வியும், பயிற்சியும், பன்மொழி அறிவும் அவசியப்படும். இந்த வகையிற்தான் உலக வர்த்தகத்தை மையமாகக் கொண்ட ஒவ்வொரு அலகினதும் தேவைக்கேற்ப கல்விமுறை அமையவேண்டி ஏற்படும். அத்துடன் ஆராய்ச்சித் துறையும் இத்தகைய வர்த்தக நலன்களை பேணவும் கண்டறியவுமே பயன்படுத்தப்படும்.

ஆதலினால் உலக வர்த்தகத்திற்கு ஏற்ற ஒரு நவீன மயமாக்கலும் அத்தகைய நவீன மயமாக்கலுக்கு ஏற்ற கல்வி முறையும் இலங்கையிற் துரித கதியில் இடம்பெற உள்ளன என்பதை தெளிவாகக் கூறலாம். எனவே தற்போது இலங்கையின் கல்விக் கொள்கையைத் தீர்மானிக்கும் உரிமை பெருமளவு சர்வதேச வர்த்தகர்களின் கைக்கு போய்விட்டது என்பதைத் திடமாகக் கூறலாம்.

—சாரணன்

## ஆபிரிக்க பெண்கள் நாள் ஆகஸ்ட்–9

தென் ஆபிரிக்கா இராணுவ மயமாகி வருவலும், இந்நாட்டின் பெரும் வர்த்தக நலன்களின் சுதந்திர செயற்பாட்டாலும் ஆபிரிக்காவுக்கு வரவுள்ள ஆபத்தை ஆபிரிக்கப் பெண்கள் மிக நன்றாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் நிறவெறிக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இனவாதிகளின் கைகளில் அரசியல் அதிகாரம் இருப்பதன் காரணத்தால், தென் ஆபிரிக்கா வைத்திருக்கும் அணு ஆயுதங்கள் மிக ஆபத்தானவை என்பதை ஆபிரிக்கப் பெண்கள் நன்றாகவே புரிந்துள்ளார்கள். ஆகையினால், தென் ஆபிரிக்காவின் இந்தக் கொள்கைக்கு எதிரான பொதுமக்கள் அபிப்பிராயம் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது. தென்ஆபிரிக்கப் பெண்கள் அங்கோலா, மொசாம்பிகியு, தான்சானியா சாம்பியா ஆகியநாட்டுப் பெண்களுடன் சேர்ந்து தொழிற்சாலைகளில் உலக பெண்கள் நாளாக மார்ச் 8ம் திகதியும், ஆபிரிக்கப் பெண்கள் நாளான ஆகஸ்ட் 9ம் திகதியும் ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி வருகிறார்கள்.

கதவு 2 காற்றலை 3

# ஆண் மேலாதிக்கம்– அதன் அளவுகோல்

பெண்விடுதலை என்ற பதமே இன்று, ஆண் பெண் வேறுபாடின்றி எம்மில் பலருக்கு ஒவ்வாமைத் தன்மை பெற்றதொன்றாக உள்ளது. விவாதத்தின்போது அதிகம் உணர்ச்சி கொந்தளிப்புகளை ஏற்படுத்தும் சமூக விவகாரங்களில் இதுவும் ஒன்றாகும். இதுபற்றிய விவாதம் வருமானால் வசனத்துக்கு ஒருதடவை ''ஆனாலும்,'' ''எப்படியிருந்தாலும்'' போன்ற சொற்பதங்கள் மிகத் தாராளமாக பயன்படுத்தப்படும்.

ஆண்மேலாதிக்கம் என்று கூறியவுடனேயே பலர் தண்ணீரில் போடப்பட்ட சோடியம் போல் உடன் எதிர் வினை புரிகிறார்கள். வீறு கொண்டு ஏதேதோ பேசித் தள்ளிவிடுகிறார்கள். இப்போது பெண்கள் தான் ஆண்களை அடக்குகிறார்கள் ஆண்மேலாதிக்கம் என்பதே இல்லை என்று பட்டியல் இட்டுக் காட்ட ஆரம்பித்து விடுகிறார்கள்.

இந்திய சமூகத்தில், (தெற்காசிய பிராந்திய அனைத்து நாடுகளையும் குறிக்கிறது.) ஆண்மேலாதிக்கம் பற்றியும் சாதி அடக்குமுறை பற்றியும் பேச ஆரம்பிக்கும்போது முன்சொன்னவாறு நடந்து கொள்வது ஒரு வழமையாகவுள்ளது. முன்னைய காலத்தில் இது தொடர்பாக காட்டு மிராண்டித்தனமான அடக்கு முறைகள் நிலவியதை ஒப்புக் கொள்கிறார்கள். இன்று அவை ஒழிந்து விட்டன. அவற்றின் மீத மிச்சங்கள் மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக நிலவுகின்றன. இவற்றை பெரிதுபடுத்தி அதை ஒரு சமூக விவகாரமாக்குவது தவறு என்றெல்லாம் வாதம் புரிகின்றனர். பெரும் மன்னர் காலத்துக்கே உரித்தாய் இருந்த காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையின் பகிரங்கவடிவங்கள் கணிசமானளவு ஒழிந்து விட்டன என்பதே உண்மையாகும். இரகசியமான முறையில் இன்னும் அவ்வித அடக்கு முறைகள் நிலவவே செய்கின்றன. அவை முன்னைப் போல் இல்லாது ''புத்திசாலித்தனமாக'' நடைபெறுகின்றன. நாகரிகத்தின் வளர்ச்சியுடன் சேர்த்து ஆண்மேலாதிக்கமும், சாதி ஒடுக்குமுறையும் நவீனமயப் படுத்தப்படுகின்றன. இவை இரண்டும் மனோவியல் சித்திரவதை என்ற புதியதொரு வடிவத்துள் பிரவேசித்துக் கொண்டுள்ளன. இம் மனோவியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுபவர்கள் நிரந்தர தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அல்லது ஒரு வகை மனோ நோயாளர்களாக மாற்றப்படுகிறார்கள். சிலர் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இம் மனோவியல் சித்திரவதைதான் முதலாளித்துவ காலகட்ட நவீன காட்டுமிராண்டித்தனமாகும். நில பிரபுத்துவ மன்னர்கால காட்டுமிராண்டித்தனத்திலும் விட இது அதிக வினைத்திறன் மிக்க, கொடூரமான காட்டுமிராண்டித்தனமாகும்.

கணவனை இழந்த பெண்ணை உடன் கட்டை ஏறச் சொல்வது மன்னர்கால காட்டுமிராண்டித்தனம், அதே பெண்ணை மங்கல நிகழ்ச்சிகளில் எதிலும் முன்வராமல் தடுத்து நிறுத்துவது நவீன காட்டுமிராண்டித்தனமாகும். 'பெரியோர்களின்' சபை நடுவே பெண் நடனமாடி அவர்களின் காம விகாரத்தை தணிப்பது மன்னர் கால காட்டு மிராண்டித்தனம்; காமவிகாரத்தை உண்டு பண்ணக் கூடிய முறையிலான பெண் புகைப்படங்களை விளம்பரப் பொருட்களாக பயன்படுத்துவது நவீன காட்டுமிராண்டித்தனம். மனைவியின் அழகில் சந்தேகப் பட்டு மனைவியை வீட்டுக்குள் (அந்தப்புரம்) அடைத்து வைப்பது மன்னர்கால காட்டுமிராண்டித்தனம்; அதே மனைவியை 'காரியம் சாதிக்கும்' காட்சிப் பொருளாக பயன்படுத்தும் நோக்குடன் வெளியில் உலாவ அனுமதிப்பது நவீன காட்டுமிராண்டித்தனம்.

சமுதாயத்தின் வளர்ச்சி, நாகரிகத்தின் வளர்ச்சி என்பன மனிதனின் உளஉணர்வின் வளர்ச்சியையும், மனப் பண்பாட்டின் வளர்ச்சியையும் உள்ளடக்கியதாகும். இதனால் அடக்குமுறையின் அளவை மதிப்பிடும் அலகும் வேறுபடுகிறது, மாற்றமடைகிறது. நிலபிரபுத்துவ காலத்தில் சராசரியான பெண்கள் பாலியல் வன்செயல் அல்லது இம்சை என்பதை உடல்ரீதியான துன்புறுத்தல் அல்லது கட்டாயப்படுத்தலாகவே கருதினார்கள். இவ்விதமானதொன்று வரும் போது மாத்திரமே எதிர்ப்புக் காட்டினார்கள். அதே போல் கணவனைத்தவிர ஏனையோர்களால் மேற்கொள்ளப்படும் கட்டாய உடலுறவே பாலியல் வன்முறை (கற்பழித்தல்) எனப்பட்டது. மனச்சம்மதம் இல்லாத நிலையில் கணவனால் மேற்கொள்ளப்படும் உடலுறவு கூட ஒரு பாலியல் வன்செயல் என்றே ஒரு சராசரி பெண் இன்று கருதுகிறாள். இவ்விதமான பாலியல் வன்செயல் ஒரு தண்டனைக்குரிய குற்றமாக் கப்படவேண்டும் என்பதே ஒரு சராசரி பெண்ணின் அவாவாக உள்ளது.


ஆகவே எமது சமூகத்தில் நிலவும் ஆண்மேலாதிக்கத்தை மதிப்பீடு செய்யும் போதும்,

ஆய்வுக்கு உள்ளாக்கும் போதும் வளர்ந்து வரும் பண்பாட்டு கூறுகளையும், உளப்பாங்கையும், வைத்துத்தான் இந்த மதிப்பீடு செய்யப்படவேண்டும். நிலமானிய சமூக காட்டுமிராண்டித்தனம் இன்று இல்லைத் தானே. ஆகவே ஆண்மேலாதிக்கமும் இல்லைத்தானே. என்ற பாணியில் விவாதிப்பது விதண்டாவாதமாகத் தான் அமையும். தீய விளைவுகளையே உருவாக்கும். எமது சமூகத்தின் தன்மையை நாம் ஆய்வு செய்வதில் இருந்து எம்மைத் தடுக்கும். ஆக்கபூர்வமான ஆய்வு முறையை மேற்கொள்வோம்.

# பெண்ணின் உழைப்பு

"உலகின் பாதிப்பங்கினரான பெண்கள் ஆண்களிலும் பார்க்க இருபங்கு நேரம் உழைக்கின்றனர். நாள் தோறும் சராசரி 15 மணி நேரத்திற்குக் குறையாது உழைத்து உலகின் மூன்றில் இரண்டுபங்கு வேலையை செய்கின்றனர். உலகின் பாதி உணவை பெண்களே உற்பத்தி செய்கின்றனர். ஆனால் கிடைப்பதோ உல கின் பத்தில் ஒருபங்கு வருமானம்; சொத்துடமையில் நூற்றில் ஒருபங்கிற்கும் குறைவானது

உலகப் பெண்கள் நிலைபற்றிய ஐ. நா. சபையின் 1985 ம் ஆண்டு ஆண்டறிக்கை இவ்வாறு தெரிவிக்கின் றது.



இதிலிருந்து பார்க்கும் போது ஓர் உண்மை நன்றாகப் புலப்படுகின்றது.

பாட்டாளி வர்க்கத்தின் கடுமையான உழைப்பின் பயனை முதலாளி வர்க்கம் சுரண்டி சுகபோகம் அனு பவிப்பதிலும் பார்க்க மோசமானதாக முதலாளிகளா லும், ஆணாதிக்க, சமூக சக்திகளால் பெண்ணின் உழைப்பு சுரண்டப்படுகிறது.

பெண்ணின் உழைப்பிற்கான ஊதியம் ஆணுக்கு வழங் கப்படுவதைப் போல் சரிசமனாக வழங்கப்படாததோடு அவளின் உழைப்பிற்கான மதிப்பினைக்கூட சமூகம் அவளுக்கு வழங்குவதில்லை.

இத்தன்மைகளைக் கண்டறிவதற்கும் ,இதனை நிரு பனம் செய்வதற்கும் பெரிய ஆய்வுகளை நாம்மேற் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அதே சமயம் எந்தவொரு ஆய்வு நூல்களிலிருந்தும் கோட்பபாடு களிருந்தும் தரவுகள் தேடவேண்டியதும் இல்லை

நமது நாட்டிலேயே இத்தன்மைகளை வெளிப்படை யாக நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

சாதாரண பார்வையினூடாகவே நாம் இவற்றை துல் லியமாக கண்டு கொள்ளலாம்.

நமது பெண்கள் பலர் உயர் கல்வி கற்க ஆர்வம் காட்டு கிறார்கள்; படித்ததும் உத்தியோகம் தேடுகிறார்கள்; உத்தியோகமும் செய்கிறார்கள்.

பல பெண்கள் தொழிற்சாலைகள், வர்த்தக நிலை யங்கள் என்பனவற்றில் உடல் உழைப்புடன் தொடர் புடைய வேலைகளை செய்கின்றனர்.

கிராமப்புறங்களில் விவசாய வேலைகளில் பெண்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர்.

பெரிய உத்தியோகம் பார்க்கும் பெண்கூட தமது அலு வலகத்தில் மற்றைய ஆண் அதிகாரிகள்: சகஆண் உத்தி யோகத்தர்களுக்கு பயந்தோ, பணிந்தோ செயல் பட வேண்டியுள்ளது. அல்லது, உளவியல் ரீதியாக அவ்வாறனாதோர் நிலைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

வர்த்தக நிலையங்கள் தொழிற்சாலைகளிலும் இதே நிலைதான். இவற்றின் உரிமையாளர்கள் ஆண்களை விட பெண்களை வேலைக்கமர்த்துவதில் ஆர்வம் காட் டுவதற்கு இரண்டு காரணங்களுண்டு.

ஒன்று - ஆண்களைவிட பெண்களிடம் அதிக வேலை களைச் சொல்லி செய்விக்கலாம். (சற்று அதிகார பாவத்துடன்)

மற்றது- ஆண்களைவிட மிகக்குறைந்த வேதனத்தை பெண்களுக்கு வழங்கினால் போதுமானது என்கிற இலாபநோக்கு.

விவசாய வேலைகள் செய்யும் பெண்களுக்கும் இவை பொருந்தும்

பெண்களும் உத்தியோகம் அல்லது தொழிலுக்குச் செல் வது தமது தங்குநிலை வாழ்விலிருந்து மீளவேண்டும் என்கிற நோக்கத்திற்காகவல்ல. தமது குடும்ப பொரு ளாதார தேவைகருதியே செல்கின்றனர் என்றுதான் குறிப்பிடவேண்டியுள்ளது.

தொழிலுக்குச் செல்லும் ஓர் மனைவியானவள் தன் கணவனிலும் பார்க்க இருமடங்கு உழைப்பினை மேற் கொள்கிறாள்.

அதேநேரம் தொழிலுக்குச் செல்லாமல் வீட்டிலிருக் கும் பெண்கூட வெளியே தொழிலுக்குச் செல்லும் தனது கணவனைவிட அதிகநேரம் உடலுழைப்பில் ஈடுபடுகிறாள் என்பதை கவனத்திலிருத்தவேண்டும்.

## பண்பாடு

அதிகாலையில் எழும்பி சமையலில் தொடங்கி வீட்டைப்பெருக்கி, வெளியே செல்லும் கணவனுக்கும் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கும் உரிய பணி விடைகளைச் செய்வதிலிருந்து; உடைகள் தோய்த்தல் மத்தியானம் சமையல், வீட்டுப்பொருட்களை சுத்தம் செய்தல்; ஒழுங்குபடுத்துதல்; பிறகு இரவுச்சமையல், உணவளித்தல் என்பனவற்றுடன், பல பெண்கள் பொருட்கள் கொள்வனவுக்காக சந்தைக்குச் செல்லல், சிறுபிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்று பின்பு வீட்டுக்கு அழைத்து வருதல், மாலையில் பாடம் சொல்லிக் கொடுத்தல், வீட்டிலுள்ள வயோதிபர் அல்லது நோயாளியான தமது பெற்றோரை அல்லது கணனது பெற்றோரை கவனித்துப் பராமரித்தல் போன்ற வேலைகளையும் தினசரி' செய்யவேண்டிய நிலையுள்ளது. இதிலிருந்து பார்க்கும் போது வெளியேசென்று தொழில்புரியும் ஆணினது வேலை, வேலைநேரம் என்பனவற்றுடன் வீட்டிலிருக்கும் பெண்ணினது உடலுழைப்பு உழைப்பிலீடுபடும் நேரம் என்பன மிக அதிகமானதே!



—விவேக்

கணக்குப்பார்க்கப்போனால் தொழில்புரியும் கணவனானவன் தான் பெறும் ஊதியத்தைவிட அதிகமான தொகை வீட்டுவேலைகள் செய்யும் தனது மனைவிக்கு கொடுக்க வேண்டிவரும்.

ஆண் வெளியே சென்று உழைத்து சம்பளம் பெறும் ஒருவனாக இருப்பதால் சமூகத்தில் அவனது உழைப்பைப் பற்றிய மதிப்பு கூடுதலாக கணிக்கப்படும் பிழையான பார்வையொன்றுள்ளது.

இவ்வாறு பெண்களது உழைப்புக்குரிய மதிப்பும், கௌரவமும் அவர்களுக்கு வழங்கப்படாமையும் பெண் அடக்குமுறையின் முக்கியமானதோர் அங்கம் எனலாம்.

பெண்ணினது உழைப்பின் பரிமாணம் சமூகத்தாலும், ஆதிக்கப்போக்குள்ள ஆண்களாலும் சரியாக உணரப்படவேண்டும். அதற்குரிய கௌரவமும், மதிப்பும் வழங்கப்பட வேண்டும்.

## அவளுக்கு... கவிதை

அன்பானவளே,
நீ ஓர் இயந்திரம்
உயிருள்ள இயந்திரம்!

உன்னைச் சுற்றி நீயே
வேலி சமைத்துக் கொண்டாய்
நாம்,
நம் குழந்தைகள்,
வீடு என சூழப்பட்ட
சிறியதோர் தீவாகிப்போனாய்.

காலையில் தேனீர்க்கோப்பையுடன்
என்னை எழுப்புவதிலிருந்து
எத்தனை வேலைகள் உனக்கு ?

உதவிக்கு வரும்
என்னையும் தடுத்து
கேலிகள் செய்வாய்
''நீங்கள் ஆண்பிள்ளை
இந்த வேலையா செய்வது'' என

பிரியமுள்ள என்
பழமைவாதப் பெண்ணே
காலையில் அலுவலகம்
செல்லும் என்னை
வாசல் வரை வந்து
வழியனுப்பும் போதும்
மாலையில்
காத்திருக்கும் போதும்
நான் உண்ட பின்பு
நீ உண்ணும் போதும்
அன்பின் பெருக்கைவிட
அடிமையுணர்வின்
வெளிப்பாட்டையே
அதிகம் பார்க்கிறேன்.

நீ மிகப்பெரிய உழைப்பாளி!
அலுவலகமிருந்து
சோம்பலாய் வரும் என்னை
மலையைப் புரட்டிவிட்டு
வருபவனாய்ப் பார்க்கும்
உன் பார்வையை நிறுத்து.

குற்றவுணர்வு என்னுள்
குடைகிறது.




## தடைகள் யாருக்கு?

தடைகள்
பொருட்களுக்குத்தானே
உன் முயற்சிக்கல்லவே
இடர்கள்
கல்விக்கூடங்களுக்குத்தானே
உன்
சிந்தனைக்கல்லவே

செல்வதேவன்
கல்மடு.

□□□

## மனிதனாய் இரு

வேஷங்கள் வேண்டாமே
முகமூடிகளைக் கழற்றி விட்டு
முகத்தைப்பார் பழகு

தடைகள் எதிரானால்
தைரியம்கொள் தகர்த்தெறி
வீழ்ந்து கும்பிட்டு
பின் வாயிலால்
புகுந்து செல்லல்
வேண்டவே வேண்டாம்
சமுதாயம்
எள்ளி நகையாடுகிறதா?
ஆடட்டும்
நியாயத்தின் பக்கம் நில்
மனிதனாய் வாழ்ந்திருப்பாய்

ஆதிரையன்
உருத்திரபுரம்

□□□

## மரணம்

ஜனனிக்கும் யாவுமே
மரணிக்கும் நியதியில்.
மற்றோரின் மரணத்தில்
ஜனனிக்கும் மரணமே!
உனக்கேன் இல்லை மரணம்...?

— அனு சண்முகம்
நல்லூர்

## வீரன்

தமிழன் ஓட ஓட அகதி
நின்று விட்டால் அவதி
பிடிபட்டால் கைதி
விசாரணையில் பயங்கரவாதி
வாழ்க்கையே பெரும் கனதி
இதனால் —
களைந்தான் கனவுகளை
துறந்தான் பாசங்களை
விரும்பினான் தாயகப்போரை
அணைத்தான் ஆயுதத்தை
பதித்தான் சுவடுகளை
போர்க்களம் நோக்கி!
உதிர்ந்தாலும் மீண்டும்
மலர்வான்
சிவப்பான மண்ணில்

செல்வி. தமயந்தி கணபதிப்பிள்ளை,
பருத்தித்துறை

□□□

## உலகம் கற்றுக்கொள்ளட்டும்

உலகையே தோள்களில்
சுமக்கும் வலுவிருந்தும்
ஏன் இந்த தேக்கம்?

அடுக்களை நோக்கி
ஏன் இந்த வேகம்...

பெண்ணே
தேசத்தின் வரலாறாய்
உன் சாதனைகள் தொடரவேண்டும்
இன்னுமா நிலம் நோக்கி!...

நிமிர்ந்து நில்
உன்னிடமிருந்து உலகம்
கற்றுக்கொள்ளட்டும்

—தாரிணி மயில்வாகனம்
அல்வாய் மேற்கு

## ஓவியம் – வாக்கியம் பதில்

உலகில் உதிக்கும் ஒவ்வொரு மனித உயிரையும்
உடலில் சுமப்பவள் பெண்ணென்றால் - அந்த
''உலகையே அவள் சுமக்கின்றாள்'' என்ற
உண்மையில் என்ன சந்தேகம்? - இதை
அறியா அரக்கரின், 'அடக்குமுறை' எனும்
ஆதிக்கத்தின் அழுத்தத்தால் -
உருக்குலைந்தால் அவள் தேகம்.
பெண்ணே —
கூனிய உன்னுடல் ஓர்நாள் நிமிரும்
அன்று இந்த உலகும் உருண்டு வந்து
உன் காலடியில் தவழும்.

அனு சண்முகம்

# உலகத்தை உறிஞ்சும்
# பண முதலைகள்

உலகெங்குமுள்ள 25 பெரும் பண முதலைகளின் பட்டியலொன்றை அமெரிக்காவிலிருந்து வெளிவரும் வர்த்தக சஞ்சிகையான வொப்ஸ் அண்மையில் வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலிலுள்ள 25 நபர்களில், 11 பேர் அமெரிக்கர், 7 பேர் ஜப்பானியர் மூவர் கனடியர், இருவர் ஜேர்மனியர், ஒருவர் கொறியா நாட்டவர், இன்னுமொருவர் சுவீடன் நாட்டவர் என்று அந்த சஞ்சிகைவிபரம் வெளியிட்டுள்ளது.

இவர்களில் முதலாவது பெரும் பணக்காரர் என்று கணிப்பிடப் பட்டுள்ளவர்டைக்கிச்சிறோ மோறி என்ற ஜப்பானியர். இவரிடம் 19.71 பில்லியன் அவுஸ்திரேலிய டாலர் பெறுமதியான செல்வம் இருப்பதாக அந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது. பெருந்தோட்டப் பண்ணைச் சொந்தக்காரரான இந்த வர்த்தகரின் சொத்துக்களின் பெறுமதி சிலவேளை குறைவாகவே மதிப்பிடப்பட்டிருக்கலாம். (1பில்லியன் என்பது 10 கோடி ரூபாவாகும் )

இவரது செல்வ வருமானம் ஜப்பானிலுள்ள 'கொக்குடோ கெய்க் காக்கு' என்ற நிலக்குத்தகைப் பங்கு நிறுவனத்தில் இவருக்குள்ள 40 வீத பங்கு முதலீட்டிலிருந்தே வந்து குவிகிறது. இவரிடம் இருப்பதாகக் கருதப்படும் சொத்துப் பெறுமான மதிப்பு பற்றிய சந்தேகம் உண்மையானால், அந்த சந்தேகத்தின்படி மற்றைய 60 வீதமுதலீடும் இவருக்கு உரியதானால் இவரது சொத்துப் பெறுமதி அப்போது 45.99 பில்லியன் அவுஸ்திரேலிய டொலர் என்று ஆகும்.

ஜப்பானைப் பொறுத்த வரை கடந்த நான்கு ஆண்டுகளாக வெளியிடப்பட்டுவந்த ஜப்பானிய பெருந்தனவந்தர் பட்டியலில் ஜப்பானிய றெயில்வே போக்குவரத்து முதலீட்டாளரான யோஷியாக்கி சுட்சுமி என்பவரே முன்னணியில் நின்று வந்திருக்கிறார். இந்த முறை இவரையும் தள்ளிக் கொண்டு டைக்கிச்சிறோ மோறி முன்னணிக்கு வந்து விட்டார். ஜப்பான் முழுவதிலும் 41 பில்லியனேயர்கள் (கோடீஸ்வரர்) இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரிடமுள்ள முழுச் சொத்தின் பெறுமதி 126 பில்லியன் அமெரிக்க டாலரை விட கூடுதலான தொகை ஆகும். அவுஸ்திரேலிய டாலர் மதிப்பின்படி இத்தொகை 165. 58 பில்லியன் டாலர் ஆகும்.

இந்தப் பில்லியனேயர் (கோடீஸ்வரர்) உலகப் பந்தயப்போட்டியில் தன்னிடமுள்ள 41 பில்லியனேயர்களின் சொத்தையும் சேர்த்து உலகின் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது ஜப்பான்.

40 பில்லியனேயர்களைக் கொண்ட ஜேர்மனி இவர்களின் மொத்தமான சொத்து வருமானத் தொகையின் படி உலகில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தை நெருக்கிப் பிடித்துள்ளது.

அமெரிக்கா இந்தப் பில்லியனேயர் வரிசையில் உலகத்திலுள்ள மற்றைய பில்லியனேயர்களின் செல்வத் தொகையையும் மிஞ்சி வெளிப்படையாக மேலெழுந்து நிற்கிறது. இங்குள்ள 64 பில்லியனேயர்களின் செல்வவளம் 269 பில்லியன் அவுஸ்திரேலிய டாலர் அளவுக்கு உயர்ந்து நிற்பதாக 'வொப்ஸ்' சஞ்சிகை எழுதியுள்ளது.

பெரும் பணக்கார புள்ளிகளாக சில குடும்பங்கள் இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் சாம்மூர் என்பவரதும் அவரது உறவிர் குடும்பங்களும், டுபொன்ட் குடும்பம், ஹியேட்ஸ் குடும்பம், றொக்பெல்லர் குடும்பம், காலம் சென்ற வால்ட்டிஸ்னியின் குடும்பம் மற்றும் கனேடிய சகோதரர்களான அல்பேட், ஹால்ப் றெச்மன் குடும்பம் ஆகிய குடும்பங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் சாம்மூர் வால்ட்டினதும் அவரது உறவினரதும் குடும்பங்களுக்கிடையே 24/31 பில்லியன் அவுஸ்திரேலிய டாலர் மதிப்புள்ள செல்வ வளம் பங்கிடப்பட்டுள்ளதாக அறிந்து கொள்ளப்பட்டுள்ளது. டுபொன்ட் குடும்பத்துக்கு 10 பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான சொத்து இருப்பது தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த குடும்ப பில்லியனேயர்களுக்கு மறுபுறத்தில் தனிப்பட்ட தனவந்தர்களும் இருக்கின்றார்கள். இதில் 7.36 பில்லியன் அவுஸ்திரேலிய டாலர் பெறுமதியான சொத்துக்களின் சொந்தக் காரரான ஜோன் வேர்ணர் கிளச் ஒருவர். இவர் தான் மெட்ரோ மீடியா நிறுவன உரிமையாளர். மற்றவர் காம்பெல்சூப்ஸ் நிறுவனத்துக்கு சொந்தக்காரரான டோரன்ஸ்.

இந்தப் பில்லியனேயர்கள் முறைகேடான வழிகளால் ஆக்கிக் குவித்துள்ள செல்வ வளம் உழைக்கும் வர்த்தகத்தினரைக் கொடூர

(13ம் பக்கம் பார்க்க)

# போரும் அதற்கவசிய நிறுவன கட்டமைப்புகளும்

அத்தியாயம் 4 - மாதுங்கன்

சமூகத்தன்மைபெற்ற அனைத்து தொடர் செயற்பாடுகளும் (சமூகநிகழ்ச்சிப்போக்கு) தத்தமக்கென தனித்துவமான நிறுவன கட்டமைப்புக்களை கொண்டதாகவே உள்ளது. இவ்விதமான கட்டமைப்பு ஒன்று தவிர்க்க முடியாததாகும். அது இல்லையானால் அந் நிகழ்ச்சிப்போக்கு நடைபெறமாட்டாது. ஒரு சமூக நிகழ்ச்சிப்போக்கை நடத்த விரும்புகிறவன், ஒரு சமூக நிகழ்ச்சிப்போக்கு நடைபெறுதல் அவசியம் என கருதுபவன், அச் சமூக நிகழ்ச்சிப்போக்கை நடத்திமுடிக்க அவசியமான நிறுவன கட்டமைப்பை உருவாக்கவும் அதைப் போதிக்கவும் முன்வரவேண்டும்.

கல்வி என்பதும் சமூக தன்மைபெற்ற ஒருதொடர் செயற்பாடாகும். இந்த சமூக நிகழ்ச்சிப் போக்கிற்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், கல்வித் திணைக்களம், பாடசாலைகள் போன்ற நிறுவன கட்டுமானங்கள் அத்தியாவசியமானவையாகும். இவற்றை நிறைவேற்று அங்கங்களாகக் கொண்டால், கொள்கைவகுப்பு திட்டமிடல் என்றஅங்கமும் அவசியமாகின்றது இது போன்றே அனைத்து நிகழ்ச்சிப்போக்குகளுக்கும் கொள்கை வகுப்பு திட்டமிடல் அங்கங்கள், நிறைவேற்று அங்கங்கள், என இருவகை நிறுவன கட்டமைப்புகள் இருக்கும். போர் என்ற சமூக நிகழ்ச்சிப் போக்கும் இதற்கு விதிவிலக்கானதல்ல.

வர்க்க, இன முரண்பாடுகள் நிலவும் சமூக அமைப்பில் அனைத்துச் சமூக நிகழ்ச்சிப்போக்குகளும் ஒரு குறிப்பிட்ட அரசியல் அபிலாசைகளைக் கொண்டதாகவே இருக்கும். ஒரு குறிப்பிட்ட அரசியல் தலைமைக்கு கீழ்ப்பட்டதாகவே இருக்கும். சிறிலங்காவின் கல்வி செயற்பாட்டைப் பொறுத்தவரை கல்வி அமைச்சே அந்த அரசியல் தலைமையாகும்.

போரிற்கு அவசியமானது போர்த்திறன்கொண்ட, போர்ப்பயிற்சி கொண்ட அணியும், அப்போரை அன்றைய அரசியல் தேவையுடன் சரியான முறையில் பொருத்திச் செல்லக்கூடிய அரசியல் தலைமையுமாகும்.

போர்ப்பயிற்சி, போர்த்திறன் என்னும் போது அது விரிந்த பரிமாணங் கொண்டது. களப்பயிற்சி மாத்திரமல்ல, படையணியை நடத்தும் திறன், படையணிக்கு அவசியமான கருவிகள், வைத்திய வசதிகள், பண்பாட்டு வளர்ச்சிகள், அரசியல் அறிவு வளர்ச்சிகள், தொழில் நுட்ப தேவைகளைப் பூர்த்தி செய்தல், எதிரியின் நடமாட்டங்களை அறிவதற்கான ஒற்றர் சேவைகள் ஆகிய இத்தியாதி திறன்களைப் பெற்றவர்களின் ஒன்றிணைப்பே போரிற்கு அவசியமான நிறுவன கட்டமைப்பாகும். இதையே இன்று படை அல்லது சேனை என்று பொதுப்பட அழைக்கிறோம்.

வெவ்வேறு சமூக நிகழ்ச்சிப்போக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு என்று அமைக்கப்படும் வெவ்வேறு நிறுவன கட்டுமானங்களுக்கும் அதுஅதற்கென்று தனித்துவமான குணவியல்புகளும் திறன்களும் உண்டு. இவ்வித தனித்துவ குணவியல்புகளும், திறன்களும் அத்தியாவசியமானதாயும் உள்ளன.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தனித்துவமான குணவியல்புகள் உண்டு. நிர்வாக சேவையில் இருப்பவனுக்கு என்று சில தனியான குணவியல்புகள் உண்டு. அதேபோலவே சேனையில் உள்ளவர்களுக்கு என்றும் சில தனியான குணவியல்புகள் உண்டு போர் என்ற செயற்பாட்டில் எதிரியை அழித்தொழிப்பதில் மன ஊசலாட்டம் இன்மையே அந்த மனோநிலையாகும். ஒரு ஆசிரியன் தனது மாணவர்களைப் பொறுத்தவரை எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு பிரம்பைப் பயன்படுத்துவதையும், கடுமையான (கண்டிப்பான அல்ல) சொற்களைப் பயன்படுத்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் ஒரு போர் வீரன் தனது எதிரியை அழிப்பதற்கும், நிராயுதபாணியாக்குவதற்கும் எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் கடுமையான முறையில் நடந்துகொள்வதும் அவசியமானது. எதிரியை அழிப்பது என்பது ஒரு பழிவாங்கும் நடவடிக்கையல்ல. எதிரியின் போர்த்திறனை அழிப்பதுடன் தொடர்பு பட்டதாகும். தனது போர்த்திறனை இழந்த எதிரியை குரோத உணர்வு எதுவுமின்றி ,ஜீவகாருணியத்துடன் நடத்த வேண்டியது அவசியம். இதுவும் ஒரு போர்வீரனுக்கு அவசியமான ஒரு பண்பாகும்.

ஒரு பாடசாலையில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் - வகுப்பாசிரியருக்கும்" - மாணவர்களுக்கும், அதிபருக்கும் - மாணவர்களுக்கும், இடையே உள்ள உறவு எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு ஜனநாயகத்தன்மை பெற்றதாக இருக்க வேண்டும். ஓவ்

வொருவரும் தாம் செய்யப்போகும் ஒவ்வொரு காரியத்தையும் ஏன் எதற்காக என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதைப் புரிந்து கொள்ளாமல் அவர்களால் அதை சரியாகச் செய்யமுடியாது.

ஆனால், படையினுள் அல்லது சேனையினுள் நிலைமை வேறு விதமானது. இங்கு ஆணைக்கு கீழ்ப்படி என்ற கோட்பாடே கடைப்பிடிக்கப்படுகிறது. நீண்ட தயாரிப்புகள், படை நகரல்கள், ஆயுத கையிருப்புக்கள், ஆள் அணி வளங்கள், சமருக்கான வியூகங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை பல்வேறு காரணங்களால் படையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வெளிப்படுத்த முடியாத நிலையுள்ளன. அதுவும் குறிப்பாக கொரில்லா போர் நடவடிக்கையில் இது மிகச் சாதாரணமானது. இதனால் படையினுள் முன்சொன்னவகையான ஜனநாயகத்துப் பதில் ஒருவகை இரும்புக் கட்டுப்பாடே நிலவுகிறது. பாடசாலையில் அமைக்கப்படும் சாரணர் அமைப்பினுள் நிலவும் ஜனநாயகமும், வகுப்பறையில் நிலவும் ஜனநாயகமும் ஒன்றுதானா? சாரணர் அமைப்பினுள் இறுக்கமானதொரு கட்டுப்பாடு நிலவுவது தெரிந்ததல்லவா?

பயன்படுத்தும் ஆயுதங்கள், சமரின் போதான வியூக அமைப்பு முறைகள், போர் பயிற்சிகள், இராணுவ ஒழுங்கு விதிகள், இராணுவ உசார் நிலையை தொடர்ந்து பேணி வைத்திருப்பதற்கான ஒழுங்குகள் ஆகியன தொடர்பாக, அதாவது இராணுவ திறனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாக ஆக்கிரமிப்பு இராணுவமும் விடுதலை இராணுவமும் குணாம்ச வேறுபாடுகள் கொண்டவையல்ல. பலம் பலவீனம், போதும் போதாமை, நுட்பமானது சாதாரணமானது போன்றஅளவியல் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் குணவியல் வேறுபாடுகள் இருக்காது.

அதே நேரத்தில், இராணுவ உள் அமைப்பைப் பொறுத்தவரையிலும், சேனையின் அறவொழுக்கத்தைப் பொறுத்தவரையிலும் ஆக்கிரமிப்பு இராணுவமும் விடுதலை இராணுவமும் குணாம்ச வேறுபாடுகள் கொண்டவை. ஆக்கிரமிப்பு இராணுவத்துள் உயர் அதிகாரிகள் அதிகார மமதை கொண்டவர்களாகவே இருப்பார்கள். இவர்களுக்கும் சாதாரண சிப்பாய்களுக்கும் இடையில் ஒரு நல்லுறவு இருப்பதில்லை. இதுதான் ஆக்கிரமிப்பு இராணுவத்தை உள்ளிருந்து அரிக்கும் புற்றுநோயாகும். மாறாக, விடுதலை இராணுவத்துள் அதிகாரிகளுக்கும் சாதாரண போர் வீரர்களுக்கும் இடையே ஒரு நல்லுறவு நிலவும். ஒருவர் நலனில் மற்றவர் பரஸ்பர அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள். இது முதலாவது குணாம்ச வேறுபாடாகும்.

இரண்டாவது குணாம்ச வேறுபாடு, சேனையின் அறவொழுக்கம் சம்பந்தப்பட்டதாகும். விடுதலை இராணுவம் தேசநேசம், மக்கள் நேசம், ஈக (தியாக) உணர்வு, தனிநபர் நலனை போராட்டத்திற்கு அர்ப்பணிக்கும் மனப்பான்மை ஆகிய அறவொழுக்கங்களைக் கொண்டதாக இருக்கும். ஆக்கிரமிப்பு இராணுவமோ ஆக்கிரமிப்பு உணர்வும் தனிநபர் லாபமீட்டும் நோக்கும், தனிநபர் நலனை முதன்மைப்படுத்தும் தன்மையும் கொண்டதாகவே இருக்கும். சிலவேளைகளில் ஆக்கிரமிப்பு உணர்வு தேச வெறியாக மாற்றப்பட்டு ஓர்வகை தேசப்பற்றை உருவாக்கக்கூடும். ஆனால், நீண்ட காலநோக்கில் தனிநபர் லாபமீட்டும் நோக்கு இந்த தேசவெறித் தேசப்பற்றைக் கூட கொன்றுவிடுகிறது.

ஆக்கிரமிப்பு இராணுவம் ஆகக்குறைந்தது ஒரு மரபுவழித் தன்மை பெற்ற கிரமமான சேனையாகவே இருக்கும் (Conventional Regular Army) (அணுவாயுதக் கருவிகள் பாவனைக்கு வந்ததன் பின்னர், இப் போர் கருவிகளே நவீன கருவிகளாக கருதப்பட்டன. ஏனைய ஆயுத போர்க்கருவிகள் மரபுவழிக் கருவிகளாக கருதப்பட்டன. மரபுவழிப் கருவிகளைத் தாங்கிய படையே மரபுவழிப் படை எனப்படும்.) வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு இராணுவம் அணுவாயுத படைப்பிரிவையும் தனது அங்கமாகக் கொண்டிருக்கும்.

சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு இராணுவம் ஆரம்பத்தில் ஒரு பலவீனமான, மிக எளிய முறையில் ஒருங்கமைக்கப்பட்ட ஒரு மரபுவழித் தன்மை பெற்ற கிரமமான சேனையாகவே இருந்தது. போராட்டத்தின் ஊடாக இன்று அது நவீனத்தன்மைகள் பெற்ற ஒரு மரபுவழித் தன்மைபெற்ற கிரமமான சேனையாக வளர்ந்து வருகிறது.

விடுதலை இராணுவத்தைப் பொறுத்தவரை அது சிதறுண்ட, மிகப் பலவீனமான முறையில் மத்தியத்துவப்படுத்தப்பட்ட கொரில்லாக் கூறுகளாகவே தோற்றம் பெறுகிறது. பின்னர் போராட்டத்தினூடே அது மத்தியத்துவப் படுத்தப்பட்ட ஒரு கொரில்லா சேனையாக படிமுறை வளர்ச்சி பெறுகிறது. அதற்கு அடுத்த படியாக மரபுவழி போர்முறையைப் பின்பற்றும் கிரமமான சேனையையும் கொரில்லா சேனையையும் கொண்ட ஒரு கூட்டுத் தொகுப்பாக அது பரிணாம வளர்ச்சியடைகிறது. இதுதான் விடுதலை இராணுவத்தின் வளர்ச்சி விதியாகும். தனது இறுதி வெற்றி வரை இவ் வளர்ச்சி தொடரும்.

> "அன்பைக் கொடு. உதவியைக் கொடு. உன்னால இயன்றளவு சிறிதேனும் கொடு. ஆனால் எதற்கும் விலை பேசும் பழக்கம் கூடாது."
>
> - விவேகானந்தர் -

# நிறம் மாறும் இலைகள்

கண்ணுக்கெட்டிய தூரம் எங்கும் பச்சை நிறம் நீக்க மற நிறைந்து கிடக்கிறது.

தாவரங்களின் இலைகள் பச்சை நிறமானவை. இலைகளே சூழலில் பச்சை நிறம் ஆட்சி புரியக் காரணமாக அமைகின்றன.

இலைகளில் பச்சையம் என்றபொருள் உள்ளது. இது 'குளோரபில்' (*chlorophyll*) என வழங்கப் படுகிறது. 'குளோரபில்' என்ற இப் பச்சை நிறப்பொருளே இலைகள் பச்சை நிறமாகத்தோன்றக் காரணமாக உள்ளது.

இலைகளில் பச்சைய உருமணிகள் (குளோரோபிளாஸ்ற்) என்ற பகுதிகள் உள்ளன. இவற்றிலேதான் பச்சையம் என்ற நிறப் பொருள் உள்ளது.

தமக்குத் தேவையான உணவைத் தாமே ஆக்குவது தாவரங்களுக்குள்ள சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். பச்சைய உருமணிகளிலுள்ள பச்சையமே உணவை ஆக்கும் ஆற்றலைத் தாவரங்களுக்கு வழங்குகின்றது.

இலைகள் பச்சையத்தின் துணையுடன் மண்ணிலிருந்து பெற்ற நீரையும் வெளியிலிருந்து பெற்ற காபனீரொட்சைட்டையும் உணவாகத் தொகுக்கின்றன.

சூரியனிலிருந்து பெறப்படும் ஒளிச்சக்தி உணவுத் தொகுப்புக்குப் பயன்படுகிறது. ஒளிச்சக்தியை இரசாயனச் சக்தியாக மாற்றிச் சேமிக்கப் பச்சையத்திலுள்ள சேர்வை ஒன்று துணை செய்கிறது. உணவுத் தொகுப்பு ஒளித்தொகுப்பு எனப்படுகிறது.

தொலைவில் பச்சை நிறமாகத் தோன்றும் இலைகளுக்கு அருகே நெருக்கமாகச் சென்றால், இந்தப் பசுமைக்காட்சி முழுவதும் உண்மையல்ல என்பது புலப்படும்.

குரோட்டன் செடியின் கிளை ஒன்றை நெருங்கிப் பார்த்தால் அதன் இலைகளிலே குருத்துப் பச்சை, கடும்பச்சை, மஞ்சள், செம் மஞ்சள், சிவப்பு முதலிய பல வண்ணங்கள் திட்டுத் திட்டாக இருப்பதைக் காணலாம்.

இளமையில் சில இலைகள் சிவப்பாக இருக்கும். பின்னர் பச்சையாக மாறும். இறுதியில் மஞ்சளாக அல்லது செம்மஞ்சளாக மாறி உதிரும்.

சில இலைகள் இளமையிற் பச்சையாகவும் பின் சிவப்பாகவும் காணப்படும். 'குருதி கசியும் இதயம்' (*Bleeding Heart*) என்று அழைக்கப்படும் சிறு செடியில் இலையின் அடிப்பகுதி சிவப்பாகவும் எஞ்சிய பகுதி பச்சையாகவும் காணப்படும். இத்தகைய பல நிறங்கொண்ட (பன்னிற) இலைகளையுடைய தாவரங்களை வீட்டுப் பூங்காக்களில் அழகுக்காக வளர்க்கின்றனர்.

தாவர இலைகளிலே காணப்படும் இந்த நிறக் கோலங்களுக்குக் காரணம் என்ன?

பச்சையம் காலத்துக்குக் காலம் இவ்வாறு நிறமாற்றத்துக்கு உள்ளாகிறதா?

அறிவியல் அறிஞர்கள் இது பற்றி ஆராய்ந்து விளக்கம் அளித்துள்ளனர். பரிசோதனைகள் மூலம் பச்சையம் என்பது தனிப் பொருள் அல்ல; அது நான்கு வேறுபட்ட இரசாயனப் பொருள்களால் ஆக்கப்பட்டது என்று கண்டறிந்துள்ளனர்.

இந்த இரசாயனப் பொருள்களுக்கு குளோரபில் - ஏ, குளோரபில் - பீ, கரற்றீன், சாந்தோபில்என்று பெயரிட்டுள்ளனர். குளோரபில் - ஏ இளம்பச்சை நிறமானது. குளோரபில் - பீ கடும் பச்சை நிறமானது. கரற்றீன் செம்மஞ்சள் நிறமானது. சாந்தோபில் மஞ்சள் நிறமானது.

கலச்சாற்றில் அந்தோசயனின் என்ற இரசாயனப் பொருள் உள்ளது. இது சிவப்பு நிறமானது.

இந்த நிறப் பொருள்கள் இலையின் வெவ்வேறு

வளர்ச்சிப் பருவங்களில் ஆட்சி உள்ளவையாக இருக்கும். எப்பொருள் ஆட்சி உள்ளதாக இருக்கிறதோ அதற்கேற்ப இலையின் நிறம் அமையும்.

இலையின் நிறத்துக்கு மட்டுமன்றி தாவரத்தின் ஏனைய பகுதிகளில் இந் நிறங்கள் தோன்றவும் இவ் விரசாயனப் பொருள்களே காரணமாகும்.

சில இலைகளில் இலையின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு நிறங்கள் ஆட்சியுள்ளவையாயிருக்கும். இலை பல்வேறு நிறப் பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். இவ்விலைகள் பன்னிற இலைகள் எனப்படும். ❁

## அறிவியல் உண்மைகள்

# நிலநடுக்கம்

1991, ஒக்டோபர் 20, அதிகாலை 2.30 மணிக்கு இந்திய - திபேத் எல்லையில் நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. நீண்ட நேரத்துக்கு நிலம் நடுங்கவில்லை. 45 விநாடிகள் மாத்திரமே இது நீடித்தது. ஒக்டோபர் வரையான புள்ளிவிபரப்படி உத்தரகாசி என்ற பிரதேசத்தில் மட்டும் சுமார் 1,000 பேர் இறந்து விட்டார்கள். 30,000 க்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்டம். கிட்டத்தட்ட 250 கிராமங்கள் சர்வநாசம். பாலங்கள் இடிந்து விட்டன. 60 கிலோ மீட்டருக்கு வீதிகள் சின்னாபின்னமாயின. சிவகாசியை தொடுக்கும் 56 மீட்டர் நீளமான உருக்குப்பாலம் எக்கச்சக்கமாக வளைந்து சிதைந்து பாகீரதியின் பிரவாகத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

இப் பூகம்பத்தைப் பற்றி இந்திய அறிவியலாளர்கள் கீழ்வருமாறு கூறியுள்ளார்கள்.

" இருநூற்றுமுப்பது லட்சம் ஆண்டுகளாக இருந்து வரும் இந்திய நிலப்பகுதி ஆண்டொன்றுக்கு 5 செ. மீ. வட கிழக்கு திசையில் நகர்ந்து வருகிறது. அப்படி நகரும்போது, 30 கோடி ஆண்டுகளாக இருந்து வரும் பிரமாண்டமான யுரேசிய நிலப்பகுதியோடு முட்டிக் கொண்டு நிற்கிறது. இதன் விளைவே இந்த நாசகார நிலநடுக்கம்.

பூமிக்கு அடியில் 25 கி. மீ. நீளத்திற்குப் பிளவை ஏற்படுத்திய இந்த பூகம்பம், பூகம்பங்களை அளக்கும் ரிக்டர் அளவையில் 6.1 புள்ளிகளைக் கொண்டது. அதாவது இது மிதமான பூகம்பம். 8 புள்ளிகளைத் தொட்டிருந்தால் இதைவிட குறைந்தது 1000 மடங்கு தாக்கம் அதிகமாக இருந்திருக்கும். என்ற போதும் ஒக்டோபர் 20 தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 280 கிலோ டன்கள் எடையுள்ள வெடிமருந்தின் (டி. என். டி.) தாக்கத்தை ஏற்படுத்தியது. இது ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டைப் போல் 15 மடங்கு அதிக தாக்கம் கொண்டது.

நில நடுக்கம் ஏற்பட்ட இடத்தில் தான் பூகம்பம் - நிலத்தில் அடியில் தோன்றிய அடித்த வேறுபாடு-தோன்றியிருக்கும் என்பதில்லை. நிலத்திற்கு அடியில் எங்கோ ஓர் இடத்தில் தோன்றிய அழுத்த வேறுபாடு நிலத்தினூடு பயணம் செய்து நிலத்தடைகள் குறைவான புவியின் மேற்பரப்பின் ஊடாக வெளிவருகிறது. பூகம்பம் பூமியை விட்டு வெளிவரும் இடத்திலேயே நில நடுக்கம் தோன்றுகின்றது.

சமீபத்திய இந்த பூகம்பம் எங்கே தோன்றியது எந்தப் பாதையில் பயணித்தது என்பதை நிச்சயப்படுத்திக்கூற இன்னும் பல நாட்கள் எடுக்கும். ஆனால் ஒரு உத்தேசமாக பூகம்பமையம் கணிக்கப்பட்டிருக்கின்றது. அது நகர்ந்து செல்லக் கூடிய பாதைகளும் கணிக்கப்பட்டுள்ளன.

### உலகத்தை உறிஞ்சும்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் சுரண்டியே சேர்த்துக் குவிக்கப்பட்டதாகும். ஏகாதி பத்திய ஆட்சி நடைமுறைகள் இதற்கான வசதி வாய்ப்புகளை இந்தச் சுரண்டற்காரர்களுக்கு அளித்துள்ளது.

தனிப்பட்டவர்களின் நலன்களுக்குப் பயன்படும் இந்த செல்வம் அதற்குப் பதிலாக பல பல ஆயிரக் கணக்கானோரின் நலன்களுக்கு பயன் பட வேண்டு மானால் அதற்கு என்ன செய்யலாம் என்று மனத்தில் கற்பனை செய்து பாருங்கள்.

'வான்காட்' இதழில் வெளியான கட்டுரை
தமிழாக்கம்;- எஸ். எம். எஸ்.

**வி. ரவிச்சந்திரன், மானிப்பாய்.**

கேள்வி:- குண்டு வீச்சுகள், எரிபொருள் தட்டுப்பாடுகள் மத்தியிலும் தமிழ் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் :- ''வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்''

**மு. இதயரூபன் கொக்குவில்**

கே :- இன்னும் ஒரு வருடத்துள் சிறிலங்கா இராணுவம் புலிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடும் என்று கூறப்படுகிறதே...?

ப :- மீண்டும் ஒருதடவை புலிகள் ''இன்றுபோய் நாளைவா'' என்று கூறப் போகிறார்கள்

**செ.ஜோசப் ஸ்ரான்லி நாவாந்துறை**

கே :- ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோருவோருக்கெதிராக கலவரங்கள் தோன்றி வருகிறதாமே?

ப :- அடங்கிவாழ தீர்மானித்தவனைக் கண்டால் மேலும் அடக்க நினைப்பதுதான் மனித இயல்பு போலும்.

**க. விக்கினேஸ்வரன் சாவகச்சேரி**

கே :- சோதனை நிலையத்தின் மீதும் குண்டு வீசுகிறார்களே எதற்காக?

ப :- மொழிவாரி தரப்படுத்தலில் தொடங்கி தரைமட்டப்படுத்தல் வரை வளர்ந்து விட்டார்கள்.

**மா. குமாரதாசன் யாழ்ப்பாணம்**

கே :- 'பயங்கரவாதத்தை' எதிர்க்க வேண்டும் என சூள் கொட்டும் அரசாங்கம் சமாதானத்திற்கு எதிராக சிங்கள இனவாதிகள் கலகம் செய்வதையிட்டு மௌனம் சாதிப்பது ஏன்?

ப :- பாம்பாட்டி பாம்பைத்தனது கட்டுப்பாட்டின் கீழ் ஆட்டுவிக்க முற்படுவானே தவிர பாம்பை அடக்கி ஒடுக்கி அழிக்க முற்பட மாட்டான்.

**எஸ். சதாசிவம் புத்தூர்**

கே :- சிறிலங்கா இராணுவம் யாழ் குடாநாட்டிற்கு வரும் போக்குவரத்துப் பாதை அனைத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதைப்பற்றி என்ன கருதுநீர்கள்?

ப :- ஆட்களை பயணக் கைதிகளாக பிடிப்பது பற்றித்தான் இதுவரை கேள்விப்பட்டோம் மக்களின் அனைத்து போக்குவரத்து பாதையையும் பயணக் கைதிகளாக பிடிப்பது பற்றி இப்போதுதான் அறிகிறோம்.

# பகலவன் பதில்கள்

**சோ. நளாயினி சுண்டுக்குளி**

கே :- 'சார்க்' நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிராக போர்க்குரல்கொடுத்திருக்கின்றனவே அது பற்றி ஏதாவது கூறுவீரா?

ப :- வல்லரசுக்கு எதிராக ஒன்றுபட தயக்கம் காட்டுகிறார்கள். தத்தமது நாட்டு தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு எதிராக விரைவில் ஒன்றுபடுகிறார்கள்.

**வே. யோகதேவன் வட்டக்கச்சி**

கே :- தமிழ் பெண்கள் ஆயுதம் ஏந்தி, இராணுவ உடை உடுத்தி போராட புறப்படுவது தமிழ் பாரம்பரியத்துக்கு அடுக்குமா என்ன?

ப :- குற்றமற்ற தன் கணவன் கொல்லப்பட்டதற்காக, மதுரையையே எரித்தாள் கண்ணகி என்ற தமிழ் பெண்; தனது இனம் மானபங்கப் படுத்தப் படுவதை எதிர்த்து நம் பெண்கள் ஆயுதம் தூக்குவது மட்டும் தவறாகுமோ.

**ச. சுரேஸ்குமார் ஸ்கந்தபுரம்**

கே :- தைப் பொங்கலுக்கும் சைவ சமயத்துக்கும் என்ன தொடர்பு?

ப :- உளவுத் தொழிலுக்கும் சமயத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லாதது போல, உழவர் திருநாளான தைப் பொங்கலுக்கும் சமயத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

**க. ரகுவரன் குருநகர்**

கே :- பசி வந்திடப்பத்தும் பறந்துபோம் என்பதிலுள்ள பத்தும் எவை?

ப :- மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை, தானம் தவம், முயற்சி, தாளாண்மை காமம்.

**இ. தவபாலன் பளை**

கே :- தொண்டமானின் இணக்க முயற்சி வெற்றியளிக்குமா?

ப :- தலை இன்னும் ஆடவில்லையே?

**வி. சுகுமார் நெடுங்கேணி**

கே :- சீதனக் கொடுமையை அகற்றுவதற்குக் கடுமையான சட்டம் கொண்டுவர வேண்டியது அவசியமல்லவா?

ப :- லஞ்ச ஒழிப்புச்சட்டம் நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் லஞ்சம் ஒழியவில்லையே!

**எஸ். தயாநிதி நல்லூர்**

கே :- பஞ்ச காவியங்கள் யாவை?

ப :- குண்டலகேசி, வளையாபதி, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை.

**கோ. சிவகுமார் கந்தர்மடம்**

கே :- ஆறுமுக நாவலருக்கும் விபுலானந்த அடிகளுக்குமிடையிலான ஒற்றுமை வேற்றுமை யாது?

ப :- இருவரும் சைவசமய வளர்ச்சிக்குத் தொண்டாற்ற முன்வந்தவர்கள் என்பது ஒற்றுமை தீண்டாமை போன்ற சமூகப் பிரச்சினைகளில் அடிகள் முற்போக்குக் கருத்தையும் நாவலர் பிற்போக்குக் கருததையும் கொண்டிருந்தனர் என்பது வேற்றுமை.

# சடுகுடு

சடுகுடுவை 'குடுகுடு' 'கபட்டி' என்றும் சொல்வர். இன்று சடுகுடுவும் குழு ஆட்டங்களிலே முக்கியமான ஒரு ஆட்டமாகும். இது உபகரணமின்றி விளையாடப்படக்கூடிய ஒரு பாரம்பரிய விளையாட்டு, இது ஒரு குழு விளையாட்டாக இருந்தபோதும் விளையாடுபவர் ஒவ்வொருவரினதும் திறன்களை எடுத்துக் காட்டக்கூடியதொன்றாகும். இவ்வாட்டத்திற்கு அதிக இடப்பரப்புத் தேவையில்லை. இவ்விளையாட்டுக்கு மணற்றரை விசேடமானது. இதன் நீளம் 42 அடி: அகலம் 27 அடி, மைதானம் ஒரு நடுக்கோட்டினால் இரு சம பகுதிகளாகப் பிரிக்கப்படும். நடுக்கோட்டிலிருந்து இரு பக்கங்களிலும் 9 அடி தூரத்தில் இக்கோட்டுக்கு சமாந்தரமாக வேறொரு கோடு வரையப்படும். இக்கோட்டை ''போக்'' கோடு என்பர். இரு பக்கங்களிலும் 3 அடி தூரத்தில் வேறொரு கோடு வரையப்படும். இக்கோடுகளுக்கிடையேயுள்ள 3 அடி இடைத் தூரம் சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் மைதானத்துடன் சேர்ந்ததாகக் கருதப்படும் இதை தொடர் இடம் என்பர். இரு பிற் கோடுகளுக்கும் அண்மையில் 9 அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள நீள் சதுரப் பகுதி ஒன்றுண்டு. ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டோர் மீண்டும் ஆட்டத்திற் சேரும் வரையும் இப் பகுதியிலே நிற்பர்.

விளையாடும் முறைகளும் விதிகளும்:- ஆட்டக்காரரின் தொகை ஒரு குழுவில் 7 விளையாட்டு வீரர் இருபர்கள் பதிலாட்டவீரர்கள் 5பேர்கள் கால அளவு:- ஆண்கள் 20 நிமிடங்களுக்கு விளையாடிய பின் 5 நிமிட இடைவேளையுடன் மீண்டும் 20 நிமிடங்களுக்கு விளையாடலாம். பெண்களுக்கு 15-5- 15 ஆகக் குறையும்.

இரு குழுவினரும் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் மைதானத்துக்குள்ளே அகலக் கோட்டுக்கண்மையில் நிற்பர். ஒரு குழுவில் ஒருவர் ''சடுகுடு'' என்று பாடிச் செல்வோன் நடுக்கோட்டை கடந்ததும் ''சடுகுடு'' என்ற ஓசையை நடுவர் நன்றாகக்கேட்கும்படி இசைத்துக் கொண்டு செல்லுதல் வேண்டும். ஒரே நேரத்தில் ஒருவர் மாத்திரமே பாடிச்செல்லலாம்., தவறான முறையில் பாடினால் நடுவர் எச்சரிப்பர், மீண்டும் தவறைச் செய்தால் அவர் பாடிச் செல்லும் உரிமையை இழப்பர். பாடிச் செல்பவர் எதிர்க்குழுக்குரிய பகுதியிலே நிற்கும் போது பாடுவதை நிறுத்தின் அவர் வெளியேற்றப்படுவர். நடுக்கோட்டைத் தாண்டும் வரையிலே பாடிக் கொண்டே வருதல் வேண்டும். பாடி வந்தவரைப் பிடித்துக் கொண்டிருக்கும் போது, அவர் பிடியிலிருந்தும் தம்மை விடுவிப்பதற்கு முயற்சிக்கும் போதும், பிடிக்கும் குழுவினரில் எவரேனும் எதிர்க்குழுவின் பகுதியையேனும் நடுக்கோட்டையேனும் தொடுதல் கூடாது பாடுபவரை மைதானத்துக்கு வெளியே வலிந்து தள்ளுதல் கூடாது. அவ்விதம் செய்யின் தொடர்புடைய அனைவரும் வெளியேற்றப்படுவர் பாடியவர் வெளியேற்றப் படமாட்டார்.

எதிர்க் குழுவில் ஒருவர் வெளியேற்றப்பட்டதும் மறுகுழுவில் முன்பு வெளியேற்றப்ப்ட்டவர் மீண்டும் அதே ஆட்டத்திற் சேர்ந்து விளையாடுவர். இக் காரணத்தால் இதை சஞ்சீவினி ஆட்டம் என்றும் சொல்வர் பாடிச் சென்று எதிரியைத் தொட்டு மீள்பவரின் குழு ஒரு புள்ளியைப் பெறும். அதேபோல் பாடி வந்தவரை பிடிக்கும் குழு ஒரு புள்ளியைப் பெறும் ஆட்ட நேரத்துக்குள் ஆட்டக்காரர் எழு பேரையும் வெளியேற்றினால் எதிர்க்குழு நாலு புள்ளிகளைக் கூடுதலாகப் பெறும். ஆட்டமுடிவில் இரு குழுக்களும் சமமாகப் புள்ளிகளை பெறின் மேலும் 5 நிமிடங்களுக்குத் தொடர்ந்து ஆடலாம். இது பொருட் செலவோ பணச் செலவோ இல்லாத எல்லோரும் விளையாடக்கூடிய விளையாட்டு. இந்தியாவில் இவ் விளையாட்டு கிராமப் புறங்களில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இது தமிழருக்குரிய விளையாட்டு எனலாம்.

ந. துவாரகாநாதன்
கிளி / இந்து ம. வித்தியாலயம்
கிளிநொச்சி

## தும்மலில் போனாலும் தூறலில் போகாதீர்

இது தூறல் மழையில் போனால் சகுணப்பிழை என்று நமது முன்னோர்களால் சொல்லப்பட்ட ஒரு முதுமொழி. ஆனால் இன்று அறிவியல் ரீதியான ஆய்வில் தூறல் மழையில் போவது உடல் நலத்திற்கு கேடானது என்று கூறப்படுகின்றது. பெருமழையிலும் பார்க்க தூறல் மழை வானத்தில் அதி உயரத்திலே தோற்றம் பெறுகின்றது. அங்கு ஒசோன் படைக்கு ஏற்படும் பாதிப்பினால் சூரியனில் இருந்துவரும் புற ஊதா (ultra violet) கதிரின் ஊடுருவலினால் ஏற்படும் நச்சுத் தன்மை. இத் தூறல் மழையுடன் கலப்பதால் இது உடல்நலத்திற்கு தீங்காக அமைந்து இருமல், தடிமல் போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றது.

## பனிக்கட்டி ஏன் வெள்ளை நிறம்

'வெள்ளிப்பனி உருகி தலையில் வீழ்ந்தது போல் இருந்தேன்' என்றொரு பாடல் வரியுண்டு, பனிக்கட்டி வெள்ளையாக பார்ப்பதற்கு வெள்ளிக்கட்டு போன்று இருப்பது ஏன் தெரியுமா? பனிக்கட்டி தண்ணீரின் உறைந்த வடிவம் ஆகும் உறைந்த தண்ணீரில் பல படிகங்கள் காணப்படும். இப் படிகங்கள் பல முகங்களைக் கொண்டவை. இந்த முகங்கள் வெளியே உள்ள வெளிச்சத்தை பிரதிபலிப்பதால் தான் பனிக்கட்டி நிறமாக தோன்றுகின்றது.

இ. கோகுலரங்கன் 2ம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

# ஆசிரியன் சமூக மனிதன்

‘ மகரிஷி ’

சமூகத்தில் எக்காலத்திலும் பிள்ளைகள் இருப்பார்கள், என்பதால் ஆசிரியர்களும் என்றுமிருப்பர். எல்லாப் பெற்றோரும் தம் பிள்ளைகளுக்கு உணவு, இருப்பிடம், உடை, மருந்து என்பவற்றை இயன்றளவு வழங்க முயல்கின்றனர். இவை எம் சமூகத்தில் தாய் முகாமையில் தந்தை முயற்சியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இவர்களுக்குக் கல்வி வழங்குவது பாடசாலைகளின்தும் அங்குள்ள ஆசிரியர்களினதும் கடமையாக சமூகப் பணியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சமூகத்திலிருந்து வளர்ந்த மனிதர்களே பின் சமூகத்தை வளர்ப்பதில் தம் அறிவு உடற்திறன் ஆத்மா என்பவற்றை முழுதாகப் பயன்படுத்துவதை வாழ்க்கையாகக் கொள்வதே ஆசிரியத் தொழிலாகவுள்ளது. மரம் எப்படி மண்ணின் செழிப்பினால் தன்னை வளர்த்துக் கொண்டு மறுகட்டத்தில் மண்ணுக்கு செழிப்பேற்படுத்தும் முறையில் தன் இலைகளை உதிர்த்து வருகிறதோ அதே போற்தான் ஆசிரிய சமூக உறவுமுறை வளர்ச்சி பெற்றுவந்துள்ளது.

சமூகத்தின் பல்லினத் தன்மைகளை முதலில் புரிந்து கொள்பவன் ஆசிரியனே, மனிதனது அறிவு திறன் உளப்பாங்கு என்பவற்றை எல்லா நிலைகளிலும் சரியாக அடையாளம் கண்டு அவற்றை மிகச்சரியாக வளர்க்கப் பாடுபடுபவனே ஆசிரியன். இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சமூகங்களில் பலமொழி, பலஇன, பல தொழில்வகை, பல வருமான நிலை சார்ந்த பிள்ளைகள் பாடசாலையில் ஒன்றுகூடுகின்றனர். குடும்பசூழல் குடும்ப வருமானம் என்பவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்ட குழந்தைகளாக பாடசாலை என்ற சமூகத்திற்குள் தள்ளப்படுகின்ற இவர்கள் சராசரியாக ஒரு தசாப்தத்திற்குப்பின் சமூகத்தில் இணைந்து கொள்வோராகவும், சமூகப் பொறுப்புக்களைச் சுமப்போராகவும், தேவையான சமூக மேம்பாடுதரும் பொது முடிவுகளை மேற்கொள்வோராகவும் மாற்றப்பட்டு மீண்டும் சமூகத்திற்குள் அனுப்பப்படுதல் வேண்டும். இத்தகைய ‘‘வடிவமைக்கப்பட்ட மனிதர்களை’’ உருவாக்கும் பொறுப்புடையவனாக ஆசிரியன் காணப்படுகின்றான். இந்தளவு பொறுப்புக்கள் வழங்கப்படும் இவர்கள் சமூக ரீதியில் எந்தளவு பொருளாதார வசதிகளையும், சமூக அந்தஸ்தையும், சமூக மட்டத்திலான அதிகாரங்களையும், யதார்த்த ரீதியாகப் பெற்றுள்ளனர் என்பது சமூகத்தின் பெற்றோராலும் ஏனைய சமூக நிறுவனங்களினாலும் அக்கறையுடன் ஆராயப்பட வேண்டியதாகும்.

ஆசிரியர்கள் பாலர் பள்ளியில் மழலைகளுக்கு கற்பிப்பவரிலிருந்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வி வளங்குபவர்கள்வரை வேறுபடுகின்றனர். ஆயினும் பாடசாலை மட்டங்களில் கற்பிப்பவர்களையே ‘‘ஆசிரியர்’’ என்று சமூகம் அர்த்தப்படுத்தி பயன்படுத்தி வருகிறது. பாடசாலை மட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பல்வேறு இயல்பும், வேறுபட்ட திறமைகளும் உடையவர்களாகவுள்ளனர். இலங்கையில் இரண்டு லட்சம் ஆசிரியர்கள் உள்ளபோது இவர்களிடையிலான வேறுபாடுகளினளவும் அதிகமாகவே உள்ளது. மாணவர்களுடன் அவர்கள் பழகும் முறையில் பெரிய வேறுபாடுகள் உள்ளன. சிறிய பாடசாலையின் ஆரம்ப வகுப்புப் பிள்ளையுடன் ஆசிரியர்தாம் ஒரு பெற்றோர் போன்று பழக வேண்டியுள்ளது. தான் வாழும் சமூகத்தின் ஒரு அங்கத்தவராகவும் எதிர் காலத்தில் அதே சமூகத்தில் தனக்கு உதவக்கூடியவராக அல்லது தனக்கு வழிகாட்டக்கூடியவராக மாறக்கூடிய வாய்ப்புள்ள ஒருவருடன் தாம் பழகுவதை ஆசிரியர் கருத்திற் கொள்கிறார். ஆசிரியனது மொழிவளம், செயற்திறன், நடுநிலமை, நம்பிக்கைகள், நல்மணப்பான்மை, போன்ற எல்லாம் அக்குழந்தைகளில் பிரதிமை செய்யப்படுவதுண்டு. குழந்தைகளின் திறமை, ஆளுமை உளப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்வதில் பெற்றோருடன் இணைந்து அல்லது பல சமயங்களில் பெற்றோரிம் கூடுதலாகவே ஆசிரியன் பங்காற்ற வேண்டியுள்ளது.

பாடசாலைப் பிள்ளைகளுடன் பழகும்போது பல சமயங்களில் சமூக ரீதியில் வளர்த்தெடுக்கப்பட்ட முரண்பாடுகளை எதிர் கொள்கிறான். சிலர் அவற்றை இணக்கமாகத் தீர்க்கின்றனர். சிலர் மனமுறிவடைகின்றனர். நகர்ப்புறப் பாடசாலை ஆசிரியனை விட - தன் சொந்தப் பிரதேசத்திற்கு வெளியே கற்பிற்கும் ஆசிரியனை விட தனது சொந்தக் கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியன் இத்தகைய தாக்கத்திற்கு அதிகம் உள்ளாகின்றனர். சமூக சமமின்மைகளை சீரமைக்க வேண்டிய ஆசிரியனே சமூக முரண்பாடுகளின் அழுத்தங்களுக்கு உள்ளாகும் போது தொழில் சார்ந்த தோல்வியும் ஏற்படுகின்றது.

சமூகமாற்றங்கள் பல்வேறு அரசியல், பொருளாதார, தொழில்நுட்ப மாற்றங்களினால் வேகப்படுத்தப்படும்போது அதனால் சமூகத்தின் இளம் தலைமுறையினரே முதலில் பாதிக்கப்படுவர். அப்போது சமூகத்தின் சமநிலை குழப்பப்படுகின்றது. இக்குழப்பத்தைக் கட்டுப்படுத்துமாறு புதிய பொறுப்புக்களைச் சமூகம் ஆசிரியர்கள் மீது சுமத்துகின்றது.

கல்வித்திட்ட மாற்றங்கள் மிகவேகமாக மேற்கொள்ளப்படும். ஆசிரியர்கள் அதன்படி தம்மைத் தயார் செய்து கல்வியூட்டி சமூக மாற்றம் சீராக அமைய உதவவேண்டும் எனப்படுகிறது. போதைப் பொருட்கள்

பற்றியகல்வி (Drug Education) மதுபானம் பற்றிய கல்வி (Alcohol Education) பாலியற் கல்வி (Sex Education) போன்றவற்றை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டுமெனப் படுகிறது. இதற்குரிய முறையில் பாடசாலை வசதிகள் கற்பித்தல், உபகரணங்கள், ஆசிரியர்க்கான ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றனவா?

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சிறைச்சாலைகள், யுத்த ஆயுதங்கள், இராணுவவீரர் சம்பளங்கள் தொடர்பான செலவுகளை மிகவும் வேகமாக அதிகரித்து வரும்போது ஆசிரியர் சம்பளங்கள் அந்தளவிற்கு அதிகரிக்கப்படுவதற்குரிய விருப்பம் இந்த அரசாங்கங்களுக்கில்லை. பாதுகாப்புத்துறை நவீனமயமாக்கப்படும் வேகத்தில் பாடசாலைகள் நவீனமயமாக்கப்படவில்லை. இதனால் முன்னைநாள் சம்பளம், குறைந்த சமூகமதிப்பு என்பவற்றுடன் நவீன பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய சமூகத்தை அவர்கள் கட்டியெழுப்பவேண்டுமென அடிக்கடி கூறப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் ஒரு ஆசிரியன் தன் பிள்ளைகள் ஆசிரியனாகாமலிருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் அக்கறை காட்டவேண்டிய தேவையை உணர்பவனாக உள்ளான். தனது பிள்ளை ஆசிரியனாக இருப்பதை விட ஐந்து நட்சத்திரக் ஹோட்டலொன்றில் கார்ச்சாரதியாகவோ, பரிசாரகராகவோ பணியாற்றுவதை விரும்பும்நிலை வளர்ச்சி பெறுகின்றது. இது ஒரு துயரமான தொழிற்தெரிவு பற்றிய முடிவுதான். சமூகமிருக்கும்வரை ஆசிரியனுமிருப்பான். சமூக நிலமைகளை அவன் வெளிப்படுத்துவான். தன் ஆதிக்கத்தை சமூகத்தின்மீது பலமாகப் பிரயோகிப்பான். சமூகத்தைத் திறனுடையதாக்கவோ பலவீனமான தாக்கவோ கூடிய பிரதான இடத்தைச் சமூகம் அவனிடம் வழங்கியுள்ளது. வரலாற்றில் ஒருபோதும் அவனுக்குள்ள பொறுப்பை விலக்கிவிடமுடியாது. பாடசாலை வடிவங்கள் மாறலாம். ஆசிரியன் தன்னை மாற்றியும் வளர்த்தும் சமூக இளம் தலைமுறையுடன் ஊடாடி வாழ்வான். இதனால் எம் தலைமுறை மேம்பாட்டிற்காக, எம் சமூக எழுச்சிக்காக எம்சமூக நிறுவனமாகிய பாடசாலையின் செயற்திறனுக்காக ஆசிரியனை வளம் நிறைந்த வித்தாகப் பாதுகாப்போம். சமூக வளர்ச்சிக்கான மழைத்துளிகளைச் சுமந்து நிற்கும் அறிவு, நம்பிக்கை உணர்ச்சி மிகுந்த மேகமே ஆசிரியன்.

எதிர்கால சமூகத்தின் பொருளாதார, கலாச்சார, அரசியல் மேம்பாட்டின் மையை விசையாக ஆசிரியனைப் பயன்படுத்த வேண்டிய தன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட்டால் நாளைய சமூகத்தில் ஆசிரியனுமுயர்வான். சமூகமும் நிமிர்ந்து நிற்கும்.

சிந்திப்போம்; இணைவோம்: செயற்படுவோம்.

## வளைகுடாப் போர் பின்னணியில் தொலை தொடர்புச் சாதனம்

குவைத்நாட்டை ஈராக் 2. 8. 90 அதிகாலை கைப்பற்றியதுடன் ஏற்பட்ட வளைகுடா போர் நெருக்கடியைத் தணிக்க பல பக்கத்தாலும் எடுக்கப்பட்ட இணக்க முயற்சி பலிக்காமற் போகவே இலங்கைநேரப்படி அதிகாலை 5 30 மணிக்கு (17. 8. 90) 'பாலைவனப் புயல்' என்ற பெயரிட்டு வளைகுடா போர் தொடங்கியது. இந்தப் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மூன்று ஆய்வாளர்கள் வளைகுடாப் போர் பற்றிய அறிவை மக்களுக்குக் கொடுப்பதில் தொலைக் காட்சியின் பங்கு பற்றியதொரு கருத்துக் கணிப்பொன்றைச் செய்தார்கள். பின்னர் கருத்துக் கணிப்பின் முக்கிய பெறுபேறுகளை ''நிவ்ஸ் டேட்ஸ்மன் நிவ் சொஸைட்டி'' என்ற பிரிட்டிஸ் சஞ்சிகையில் அலெக்சாண்டர் கொக்போன் என்பவர் எழுதியிருந்தார். இதன்படி அவர் சில திகைப்பூட்டும் செய்திகளை வெளியிட்டார்.

கருத்துக் கணிப்பின்படி ஈராக்கின் தாக்குதலுக்கு முன்னரேயே அமெரிக்கா அத்தகைய தாக்குதல் எதுவும் ஏற்பட்டால் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக அச்சுறுத்தியிருந்ததென்று 75வீதமானவர்கள் தவறாக நம்பினர். அடுத்து அமெரிக்கா குவைத்திற்கு இராணுவ உதவி வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளதென 65வீதமான மக்கள் எண்ணினர். அத்துடன் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்ன் வளைகுடாப் பிரச்சினையை இஸ்ரேலுடன் தொடர்புபடுத்திய போது ஒவ்வொரு மூவரிலும் இருவர் 'ஏன்' என்ற கேள்வியை எழுப்பினர். இதன்படி இஸ்ரேல் மேற்குக் கரையிலும், லெபனானிலும் சட்ட விரோதமாக பிடித்து வைத்திருக்கும் பகுதி பற்றி இவர்களிற்கு எதுவும் தெரியாது. அதாவது பிடித்து வைத்திருப்பதே தெரியாது. உண்மையில் தொலைக்காட்சி பார்ப்பவர்களில் 10வீதமானவர்கள் மட்டுமே உண்மை நிலையை அறிந்திருந்தனர்.

யோ. ஜெயகாந்தன்
அரசறிவியல் மாணவன்

# அதிசயமென்ன?

உயர்திணையான
மனிதர்கள் இங்கே
அஃறிணை யானதன்
அதிசயமென்ன?

சாய்மனைக் கதிரையில்
ஓய்வாயிருந்த
அப்பாவின் கண்களில்
வீட்டு முற்றத்தில்
நிழலொன்று தெரிந்திட
''பிள்ளை ...... பார்'து ..
யாரென்றொருக்கால்'' எனக்
குரல் கொடுத்தார்!
எட்டிப் பார்த்த
செல்வமகள் ...
''அப்பா .... அது ...
தேங்காய் பிடுங்கிற
சின்னப்பொடிதான்
வந்து நிற்குது'' எனப்
பதிற் குரல் கொடுத்தாள்!

உயிருடன் உலகில்
அந்தப் பெரியவர்
உலவிய வரையிலும்
''ஐயா ...!
வாருங்கள் ... ..!'' என
அனைவரும் அவரை
முன்னெதிர் கொண்டு
அகம்முகம் மலர்ந்திட
அன்புடன் அழைத்தனர்!
ஒரு நாள் அவரின்
இறுதி ஊர்வலம்
வீதி வழியே
நகர்ந்து வந்தது!
இதனைக் கண்டவர்
''சவம் வருகுது'' என
முகத்தைச் சுழித்து
முணு முணுத்தவராய்
ஒதுங்கி நின்றனர்!

படலையடியில்
''அம்மா ......'' என்றொரு
குரல் கேட்டிடவே —
''படலையடியில்
நிற்பது யாரென்று
பாரம்மா ...'' என
அடுப்படிக்குள்ளே
இருந்தபடி அம்மா
மகளைக் கேட்டார்!
யன்னலில் நின்று
பார்த்த மகள்
''போன வெள்ளி
பிச்சைக்கு வந்ததுதான்
வந்து நிற்குது'' எனப்
பதில் குரல் கொடுத்தாள்!

வெளியே சென்றிருந்த
அன்புப் புதல்வி
ஆவல் பொங்கிட
''சீசர் ...!
என்ரை டாலிங்!
கனநேரமா உன்னைக்
காணவில்லையடா!
எங்கே இருக்கிறாய்? எனக்
கூவிக் கொண்டு
வீட்டினுள் நுழைந்தாள்!
இடுப்பளவு உயரத்திற்குக்
கொழுத்து வளர்ந்த
உயர் சாதி நாயொன்று
படுக்கையறையினுள்
படுக்கையிலிருந்து
பாய்ந்து இறங்கி
ஓடி வந்து
அவள்முன் நின்றது!
''என்ரை டாலிங்'' என
அன்புடன் அதனை
வாரி அணைத்தாள்

உயர்திணை எப்படி
தாழ்ந்தது இங்கே
அஃறிணை எப்படி
உயர்ந்தது இங்கே?
இது ஒரு மாற்றமா?
அல்லதோர் மயக்கமா?

— முருகு

## சாகும்போதும் தேடல்

கிரேகத்தின் பெரும் சிறையில் சிறைப் படுத்தப்பட்ட சோக்ரடிஸ் தன் மரணத்தை எதிர் நோக்கிக் காத்திருந்த தார். அப்பொழுது அவருடன் அந்தச் சிறையில் இருந்த மற்றொரு கைதி ஒரு பாடலைப் பாடினான். உடனே சோக்ரடிஸ் அந்தக் கைதியிடம் ஓடிச் சென்று அந்தப் பாடலைத் தனக்கு மீண்டும் ஒருமுறை பாடிக் காட்டுமாறு வேண்டினார்.

''மரண தண்டனைக் கைதியான உனக்குச் சாகப் போகும் நேரத்தில் இது எதற்கு!'' என்று ஏளனமாகக் கேட்டான் அந்தக் கைதி. இதைக் கேட்டு விட்டு ''சாவதற் குள் இன்னும் ஒரு புதிய விஷயத்தைக் கூடுதலாகத் தெரிந்து கொள்ளலாமே'' என்று பதில் கூறினார் கிரேக்க ஞானி சோக்ரடீஸ்.

எதையும் துருவித் துருவித் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதில்தான் எத்தனை ஆர்வம் அந்தத் தத்துவ மேதைக்கு.

—கல்மடு செல்வதேவன்

# பெண் விடுதலை

## - சில தகவல்கள் -

தகவல் — 1

முதலாவது கட்சி சார்பற்ற பெண்கள் அமைப்பு.

இலங்கையில் பெண்கள் இயக்கமும், பெண்நிலைவாதச் சிந்தனையும் ஐக்கிய நாடுகள் சபையாலோ, மேற்கு நாட்டுப் பெண்நிலைவாதிகளாலோ திணிக்கப்பட்டவை அல்ல. இலங்கையின் பெண்கள் இயக்கத்திற்குத் தனிப்பட்ட வரலாறு உண்டு. 1880 - 1910 காலப் பகுதியில் நடைபெற்ற கலாசாரப் புனருத்தாரணத்தில் பெண்கள் பங்கு பற்றினர். கல்வி கற்றுத் தொழில் புரியத் தொடங்கினர். (இலங்கையின் முதலாவது பெண் வைத்தியர் 1899ல் பட்டம் பெற்றார்.)

பெண்களது வாக்குரிமைக்கான இயக்கம் 1920களில் ஆரம்பித்தது. இதன் பயனாக 1931ல் பெண்கள் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றனர். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அகில இலங்கைப் பெண்கள் சங்கம் உட்படப் பல அமைப்புக்கள் சம உரிமைகளுக்காகப் போராடின. 1920களில் பெண்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் உற்சாகத்துடன் பங்கு பற்றினர். 1930களில் இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியில் அங்கம் வகித்ததுடன் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கு பற்றினர்.

இலங்கையில் முதல் முதல் தோன்றிய அரசியற் கட்சிச் சார்பற்ற பெண்கள் அமைப்பு எக்சத் தாந்தா பெரமுன (பெண்கள் ஐக்கிய முன்னணி) ஆகும். 1948ல் ஆரம்பிக்கப் பட்டு இடது சாரிக் கட்சிகளைச் சார்ந்த பெண்களால் தலைமை தாங்கப் பெற்றது.

தகவல் — 2

மார்ச் 8ன் முக்கியத்துவம்.

அமெரிக்கத் தொழிலாளர்கள் எட்டுமணி நேர வேலை நேரத்துக்காக போராடி வெற்றி பெற்ற நாளை நினைவு கூரவே மேதினம் அறிமுகமானது. அது இன்று உலகத்தின் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவராலும் கொண்டாடப் படும் ஒன்றாகியுள்ளது. அதே போலவே அதே அமெரிக்கப் பெண் தொழிலாளர்கள் 10மணி நேர வேலை கேட்டும், ஆண்களுக்கு சமமான ஊதியத்தைக் கேட்டும் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள், ஆர்ப்பாட்ட அணிவகுப்புகளையும் நடத்தினார்கள். அமெரிக்க புடவை ஆலைப் பெண் தொழிலாளர்களே இதில் முன்னணி வகித்தார். இது நடந்தது 1857ம் ஆண்டு மார்ச் 8ம் திகதியிலாகும்.

அமெரிக்காவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிக்கு வந்தது. தொழிலாளர்களின் போராட்டங்கள், எதிர்பார்ப்புகள் யாவும் அடக்கப்பட்டன. அவர்களது போராட்ட வரலாறுகளும் மறைக்கப்பட்டன.

ஆனால் வரலாற்றின் உண்மைத் தோற்றத்தை யாராலும் மறைக்க முடியாது. உலக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்றோர் பெண்விடுதலை அமைப்பு 1907ம் ஆண்டு தோற்றம் பெற்றது. இது இன்று சமதர்ம அனைத்துலக அமைப்பின் (Socialists International) சகோதரத்துவ அமைப்பாக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்ற பெயரில் இன்றும் இயங்கி வருகின்றது.

இவ்வமைப்பின் 2வது மகாநாடு 1910ம் ஆண்டு டென்மார்க்கில் கோபன் ஹேகன் நகரில் கூடியது. முதலாளித்துவவாதிகளால் மறைக்கப்பட்ட வரலாற்றை இவர்கள் வெளிக் கொணர்ந்தார்கள். அமெரிக்க பெண் தொழிலாளர்களின் போராட்ட எழுச்சிநாளான மார்ச் 8ஐ அனைத்துலக பெண்கள் நாளாக பிரகடனம் செய்தார்கள். ஜேர்மானிய பொதுவுடமைக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கினே இத் தீர்மானத்தை முன்வைத்தவராகும்.

தகவல் — 3

சேவாவனிதா

சமீப காலத்தில் இந்தோனேசிய முறையை முன் மாதிரியாகக் கொண்ட சேவாவனிதா இயக்கம் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப் பட்டது. பல்வேறு அரச திணைக்கள உத்தியோகத்தர்களின் மனைவியர் இதில் அங்கம் வகிக்கின்றனர். உத்தியோகத்தரின் அந்தஸ்துக்கு ஏற்ப மனைவியரின் அந்தஸ்தும் அமையும். உதாரணமாக அமைச்சரின் மனைவி அவ்வமைச்சின் சேவா வனிதாவின் தலைவியாக இருப்பார். இவர்கள் அரசாங்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த உதவுவதுடன் சமூக சேவைகளையும் மேற்கொள்வர். எனவே இவை நேரடியாக அரச அதிகார அமைப்புடன் தொடர்புபட்டவையே தவிரப் பெண்களின் இரண்டாம் பட்ச நிலை தொடர்பாக எத்தகைய நடவடிக்கையும் எடுப்பவையல்ல.

தகவல் - 4

குடும்ப ஒழுங்குக் கோர்வை

கியூபாவில் ஆண்கள் தமது மனைவியர்களுக்கு வீட்டுப் பணிகளில் துணைபுரியுமெனக் கோரும்

'குடும்ப ஒழுங்குக் கோர்வை' 1975ம் ஆண்டு அனைத்துலக பெண்கள் நாளான மார்ச் 8ம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

**தகவல் 5**

**கிளாரா செட்கினின் அறைகூவல்**

1934ல் பெண்களுக்கான உலக சமாதான மகாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் வைத்து உலக சமாதான பாசிஸ எதிர்ப்பு பெண்கள் குழு நிறுவப்பட்டது. இது 2வது உலகப்போரின் ஆரம்பம் வரை துடிதுடிப்பாகச் செயற்பட்டது.

இம் மாநாட்டின் போது கிளாரா செட்கினால் (1910ல் அனைத்துலக பெண்கள் நாள் தீர்மானத்தை முன்வைத்தவர்) விடப்பட்ட அறைகூவல் இன்றும் பொருந்தக் கூடியதாய் உள்ளது.

''மக்கள் திரளினரிடையே தோன்றும் வர்க்க உணர்வை அழித்து விடுதலும், வர்க்க உணர்வு பெற்றவர்களை கொலை செய்து விடுதலுமே பாசிஸத்தின் நோக்கமாகும். ... உழைக்கும் பெண்கள் ஐக்கியப்பட்ட ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியில் இணைந்து குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இந்த மிக ஆபத்தான, ஈவிரக்கமற்ற எதிரியைத் தோற்கடிக்க தம்மால் முடிந்த அனைத்தையும் செய்யவேண்டும்.''

# சித்தர்களின் சிலேடை

சித்தர்கள் என அழைக்கப்பட்ட அக்கால மருத்துவர்கள் சாதி வேறுபாடு பார்க்காமல் அனைவருக்கும் சேவை செய்தார்கள். பார்ப்பன நெறியாளர்களின் சாதியொழுக்கத்திற்கு எதிராகப்பாடினார்கள். இதனால் பார்ப்பனர்களும் ஆண்டைகளும் சித்தர்களை வெறுத்தார்கள். மருத்துவத்தையே வெறுத்தார்கள். பார்ப்பனரின் உபநிடதம் யாதுமே இவர்கள் பற்றிக் கூறாமல் அமைதி பேணுகிறது.

மருத்துவம் கலைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் தகுதியுற்றதாக நாரதரால் கருதப்பட்டது. பார்ப்பனிய சமயத்தாக்குதலில் இருந்து தம்முடைய இலக்கியங்களைக் காக்க வேண்டிய இடைக்காலச் சித்தர்கள் இருபொருள்படும் முறையில் மருத்துவக் குறிப்புகளை எழுதிப் பாதுகாத்தனர் எனக் கூறலாம்.

எடுத்துக் காட்டுக்கு-''வீரனைக் கொன்ற நீலிவேறு எதனைத்தான் கொல்லாள்?'' என்பது ஒரு இடைக்கால சித்தர் மருத்துவ மொழி, 'வீரம்' எனக் குறிப்பிடப்பட்டது நஞ்சாகிய எரியமாகும் (PHOSPHORUS) 'நீலி' என்பது 'வண்ணான் அவுரி' அதாவது வண்ணான் அவுரி எரிய நஞ்சை முறிக்கவல்லது. இதுவே இப்பழமொழியின் பொருளாகும்.

''காரியம் முடிய கழுதையையும் காலைப்பிடி''

காரியம் என்பது காரீயத்தைக் குறிக்கும் காரீயத்தை கழுதைப்பாலைக் கொண்டு வெள்ளீயமாக மாற்ற முடியுமாம். கழுதைப்பால் வேண்டுமாயின் கழுதையின் காலைப் பிடித்தாகத்தானே வேண்டும்.

''இருகுரங்கின் கையை சமைத்துண்டால் சளிபோகும்'' இரு குரங்குக்கை என்பது முசு+முசு+கை (முசுமுசுக்கை) முசு என்றால் குரங்கு எனவும் பொருள் உண்டு.

> தாசி வீடு சென்ற தறுதலைக்குச்
> செம்மையாகத் தருக செப்படிதான்;
> காசும் அற்றுவிடும் கவமிளகும்
> கதியே சைவமென் றாடு பாம்பே!

மேகவெட்டை என்ற தொற்று நோய்க்கு செருப்படை என்னும் மூலிகையைப் பயன்படுத்துக; இத்தொடர்பால் வந்த ஈளை (காசம்) சளி (கவம்) நோய்களுக்கு தாளிச சத்திரியை என்ற மூலிகையைக் கொடுக்கவும்.

## புதிர்கள்

1. நீரோடு லிகம் கறுக்க நிலபாவல் குருத்தெறியக் காரோடும் பட்டணத்தில், காயும் தின்னலாம், பூவும் தின்னலாம், இலையும் தின்னலாம், பழம் தின்னக் கூடாது அது என்?
2. பக்கமெல்லாம் பட்டையுண்டு மரமுமல்ல, பெயர்த்தெடுத்தால் முத்துண்டு சிப்பியல்ல, உடைத்தெடுத்தால் விதையுண்டு, பழமுமல்ல அது என்ன?
3. சுற்றுவேன் அந்த மரத்தை, சூடேன் அந்தப் பூவை தந்தேன் அந்தக் காயை, நாடுவேன் அந்தப் பழத்தை அது என்ன?
4. கறியைக் கறிதின்ன, கறியுடையாள் மகள் சூ... சூ... என கறி அக்கறிமுறிய பாய்ந்ததுவாம் அது என்ன?

(விடை 24ம் பக்கத்தில்)

# உலக சமாதானமும் ஐரோப்பிய பெண்களும்

கடந்த சுமார் 40 வருடங்களாக முழு உலகையும் அச்சுறுத்தி வந்த ''பனிப்போர்'' என்னும் போர் மேகங்கள் வானத்தை விட்டு அகன்று விட்டன. இதனால் முழு உலகமும் நிம்மதிப் பெருமூச்சு விட்டது. ஆனால் இவ் அகல்வுக்கான காரணங்கள் இன்னும் சரியாக பட்டியலிடப்படவில்லை, ஆராயப்படவில்லை.

வளர்ச்சி பெற்ற நாடுகளில் (முதலாளித்துவ நாடுகள்) உள்ள பெண்களின் முயற்சியும் இதில் ஒரு கணிசமான பங்கை வகித்துள்ளது என்பதை மிகப்பலர் அறியார். உலக பெண்கள் நாளில் 1980 களில் அப்பெண்களின் பங்களிப்புகள் சம்பந்தமான சில தகவல்களை இங்கு முன் வைக்கிறோம். இத்தகவல்களைத் தந்துதவிய ''சமாதானத்துக்கான போராட்டத்தில் பெண்கள்'' என்ற நூலுக்கு எமது நன்றிகள்

அநேகமான சந்தர்ப்பங்களில் மேற்கு ஐரோப்பிய சமாதான இயக்கங்களின் ஆரம்பங்களை மிக நுணுக்கமாகப் பார்த்தால் பெண்கள் அமைப்புகளாகவே அவை இருந்துள்ளன. இந்தவிடயத்தில் கூறக்கூடிய மிகக்குறிப்பான எடுத்துக்காட்டு1981-1982இலும்1983 இலுமான சமாதான அணிவகுப்பாகும். இது கொப்பன் ஹகனில் இருந்து பாரிஸ்வரையும், ஸ்ரொக்ஹொல்ம்மில் இருந்து மாஸ்கோ ஊடாக மின்ஸ்க்வரையும், டோர்மண்டில் இருந்து பூருஸல்ஸ் வரையும் ஒஸ்லோவில் இருந்து நியூயோர்க் வழியாக வாஷிங்க்ரன் வரையும் ஆனவைகளாக அமைந்தன. வட ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் சமாதானத்திற்கான பெண்களின் இயக்கமும். மேற்கு ஜேர்மானிய நிறுவனமான ஜனநாய பெண்கள் முன்முயற்சி இயக்கமும், பெல்ஜியத்திலும், நெதர்லண்டிலும் உள்ள பெண்கள் அமைப்புகளும், சோஷலிச நாடுகளில் உள்ள பொது நிறுவனங்களுமே இந்த அணிவகுப்பை முன்னின்று நடத்தின. 70வீதமான அணிவகுப்பாளர்கள் பெண்களேயாகும்.

1980 களிலான பெண்களின் சமாதான இயக்கத்தின் புதிய குணவியல்பு என்னவெனில் புதிய, தன்னெழுச்சியான ஒரு எதிர்ப்பு வடிவத்தின் தோற்றமேயாகும். அது, இராணுவ தளங்களைத் தடை செய்வதாகவும், சமாதான முகாம்கள் அமைப்பதாகவும், பாராளுமன்ற அவையை மறியல் செய்வதாகவும், தீவட்டி ஊர்வலங்கள் நடத்துவதாகவும், சமாதான திருவிழாக்கள் நடத்துவதாகவும், போர் எதிர்ப்பு தெருக்கூத்துகள் நடத்துவதாகவும் அமைந்திருந்தன.

பிரித்தானியாவில் மாத்திரம் நூற்றுக்கு மேற்பட்ட சமாதான முகாம்கள் இருந்தன. கடினமான எதிர்ப்புகளுக்கு மத்தியில், உறுதிமிக்க பிரித்தானியப் பெண்கள் கடந்த சில வருடங்களாக கிறின்ஹம் இராணுவ விமானத் தளத்தின் முன்னால் விழித்திருந்துள்ளார்கள். அவர்களில் பலர் சிறைப்பிடிக்கப் பட்டார்கள். வழக்குத்தொடரப்பட்டார்கள், காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளானார்கள். ஆனால் இவைகள் எல்லாம் போராட்டத்தைத் தொடர்வது என்ற அவர்களின் உறுதியைக் குலைக்கவில்லை. சமாதானத்துக்கும் ஆயுத களைவுக்குமான பெண்களின் நடவடிக்கை நாளை நினைவுகூரக் கோரி 1983 மே மாதம் விடுக்கப்பட்ட அறைகூவல் 600க்கும் மேற்பட்ட கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்த பெண்களைத் தெருவுக்கிழுத்து விட்டது. 1985, மார்ச் 8ம் திகதி கிறின்ஹாம் கொமன் சமாதான முகாமிலில் உள்ள பெண்கள் சர்வதேசிய பெண்கள் நாளை போர் எதிர்ப்பு மறியல் போராட்டமாக நடத்திக் கொண்டாடினார்கள்.

தமது சொந்த பாரம்பரிய அமைப்புகளைப் பாதுகாக்கும் அதேவேளையில் பிரித்தானியப் பெண்கள் நாடு தழுவிய இயக்கங்களிலும் கிளர்ச்சி நடவடிக்கைகளிலுங் கூட பங்குபற்றினார்கள். அணுவாயுத களைவுக்கான இயக்கமும் (MND) அதில் ஒன்றாகும். MND சமாதானத்திற்காக போராடும் அனைத்து பெண்கள் அமைப்புகளையும் உள்ளடக்கியதாய் இருந்தது. இது இவ்வமைப்பு, பிரித்தானிய மண்ணில் உள்ள அமெரிக்க முகாம்களைச் சுற்றி பெண்கள் முகாம்களை அமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது. அத்துடன் நேட்டோ அமைப்பில் இருந்து பிரித்தானியா விலகவேண்டும் என்றும், பிரித்தானிய மண்ணில் அணுவாயுதங்கள் பொருத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் இவ் அமைப்பு வலியுறுத்தியது. MND பெரும் கூட்டங்களுக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கும் ஒழுங்குகள்செய்தன, பாராளுமன்றத்திற்கு பல புகார்கள் அனுப்பின.

...... பத்திரிகையாளர் குறிப்புப்படி, 1983 ஒக்டோபர் 22ம் திகதி றோமில் நடைபெற்றதைப் போன்றதொரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை இத்தாலிய சமாதான இயக்கம் இதுவரை கண்டிருக்கவில்லை இதில் 75,000 க்கும் மேற்பட்ட சமாதான விரும்பிகள்

கலந்து கொண்டார்கள். இதில் கலந்து கொண்ட பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்தோர் இரா ணுவமயமாதலுக்கு எதிராக தேசம் பரந்த இயக்கங்களை நடத் திய பட்டறிவுகளை உடையவர் களாகும். 'கொமிசேயா நாளைய ஹிறோசிமாவாக இருக்கக் கூடாது'' என்பதே இவ் இயக்கத் தின் பிரதான கிளர்ச்சிச் சுலோக மாக இருந்தது. இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்துக்காக குறிக்கப்பட்ட திகதி தற்செயலானதொன்றல்ல. கடந்த வருடம் இதே திகதியில் தான் லண்டன் நீதிமன்றம் நான்கு சமாதானத்திற்கான இயக்க உறுப் பினர்களுக்கு எதிராக தண்டனை விதித்தது; இவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசக்கூடாது. என் பதுவும் ஏனைய பெண்களை சமா தானத்திற்காக அறை கூவப்ப டாது என்பதுவுமே அத்தண்டனை களாகும்.

மேற்கு பேர்லினின் பெரும் பொது மக்கள் அமைப்பாக இருக் கும் ஜனநாயக பெண்களின் இயக் கம், சமாதானத்திற்கான இயக் கத்தையே தனது நடவடிக்கை களில் பிரதானமானதானதொன் றாக எடுத்துக் கொண்டுள்ளது. ''நியூற்றோன் குண்டுகளை தடை செய்யுங்கள்'' என்ற சுலோகத்தின் கீழ் பெண்கள் ஏராளமான கை யெழுத்துகளை சேர்த்தார்கள். அத்துடன் ''நியூற்றோன் குண்டுக ளின் உற்பத்தியை முற்று முழுதாக தடை செய்யுங்கள்'' என்ற முழக் கத்தில் நடைபெற்ற மாநாட்டி லும் பெண்கள் அதிகளவில் பங்கு கொண்டார்கள்.

சமாதானத்திற்கும் ஆயுதக் குலைப்பிற்குமான இயக்கத்தில் பிரான்சிய பெண்கள் அமைப்புகள் ஏனைய நாடுகளில் உள்ள பெண் களின் அமைப்புகளுடனான தமது ஒத்துழைப்பை ஊக்கப்படுத்தி னார்கள். நாட்டின் சமாதான இயக்கங்களில் மிக உயர்ந்த பங் கினை வகிக்கும் பிரான்சிய பெண் களின் சங்கமும் இதில் ஒன்றாகும். 1981, ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி பிரான்சிய பெண்கள் நியூற்றோன் குண்டு உற்பத்தியை பெரியளவில் நடத்துவது என்று வெள்ளை மாளிகையால் எடுத்துக் கொள் ளப்பட்ட தீர்மானங்களை கண் டித்து, அமெரிக்க தூதுவரால யத்தை நோக்கி அணிவகுப் பொன்றை நடத்தினார்கள்.

பிரான்சிய பெண்கள் சங்கமும், தொழில்புரியும் கிறிஸ்தவ பெண் கள் அமைப்பும் வேறு சில அமைப் புகளும் சேர்ந்து பல்வேறு உள்ளூர் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியதுடன் மிகப் பிரசித்தி பெற்ற பாரிஸ் அறைகூவலிற்கு கையெழுத்துகள் திரட்டும் நடவடிக்கைகளிலும் ஈடு பட்டன. 100க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற அறிவியலாளர்கள் (விஞ்ஞானிகள்), அரசியல்வாதி கள், முன்னணிப் பிரமுகர்கள் ஆகியோரிடம் எதுவித நிபந்தனை களுமற்ற கையெழுத்துகளைப் பெற்றுக் கொள்வதில் வெற்றியீட் டின. அத்துடன் ஆயுதப் போட்டா போட்டிகளை இட்டு பிரான்சியர்களை விழிப்படையச் செய்வதிலும் வெற்றியீட்டின. இவ் அறைகூவல் தொடர்ச் சியான பல சமாதான ஆர்ப்பாட் பாட்டங்களை துவக்கிவிடும் உந்து சக்தியாகத் திகழ்ந்தது. 1984, ஒக்டோபர் மாதம் 28ம் திகதி பாரிஸ் நகரத்தில் நடைபெற்ற இவ்விதமான ஆர்ப்பாட்டம் ஒன் றில் சுமார் 350,000 பேர் பங்கு கொண்டார்கள்.

பெல்ஜிய, டச் சமாதான இயக் கங்கள் பெண்கள் அமைப்புகளின் மிகப் பலமான பின் உதவியைப் பெற்றுத் திகழ்ந்தன. 1983ல் அரைவாசிக்கும் மேற்பட்ட பெல் ஜியம் நகரங்களும் நூற்றுக்கும் மேற்பட்ட டச் நகரங்களும் அணு வாயுத சுதந்திர வலயங்களாக பிரகடனம் செய்யப்பட்டன. 1982ல் அமெரிக்க இராணுவ தலைமைப்பீடமான பென்டாகன் மேற்கு ஜேர்மனியில் தங்கியிருந்த அமெரிக்கத் துருப்புகளுக்கு ஹொலண்டின் ஊடாக புகையிரத மார்க்கமாக எரிபொருட்களை அனுப்ப முற்பட்டது. இதன் எதிர் விளைவாக ஹொலண்டில் இடம் பெற்ற ''புகையிரதபோராட்டம்'' கண்டு உலகே அதிர்ச்சியுற்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தண்ட வாளத்தில் படுத்தபடி தம்மை தண்டவாள சிற்றூர்ந்துகளுடன் (றெயில்வே கார்கள்) சங்கிலிக ளால் இணைத்துக்கொண்டார்கள். இதன் மூலம் புகையிரதங்கள் முன் னோக்கி நகர்வது தடுக்கப்பட்டது. 1983ம் ஆண்டு மார்ச் மாதம் பெல்ஜிய பெண்கள் ஆயுத போட்டா போட்டியைக்கண்டித்து பூரூஸல்லில் ஒரு பொதுக்கூட் டத்தை நடத்தினார்கள். இதில் ஏனைய பெல்ஜிய நகரங்களில் இருந்தும் ஹோலண்ட், பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி போன்ற அயல் நாடுகளில் இருந்துங்கூட ஆயிரத் துக்கு மேற்பட்டோர்கள் கலந்து கொண்டார்கள். 1983 மார்ச் 8ம் திகதி பெல்ஜிய தலை நகரின் வீதிகளில் மற்றோர் ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. இதில் 20க்கும் மேற்பட்ட வெளிநாடுக ளில் இருந்து வந்த பெண்கள் கலந்து கொண்டார்கள்.

நடுநிலைப் போக்குக் கொண்ட சுவிஸ்லாந்தின் பெண்கள் குழுக்கள் தாம் போர் எதிர்ப்பு இயக்கங்க களில் இருந்து விலகி நிற்பதில்லை என முடிவெடுத்தார்கள். சமாதா னத்திற்கும் முன்னேற்றத்துக்கு மான சுவிஸ் பெண்களின் சம்மேள னம் என்ற அமைப்பு 1985ம் ஆண்டு சமாதானத்தைக் கோரி யும் ஆயுத போட்டா போட்டி யையும், பட்டினியையும், வறுமை யையும் தடுக்கக் கோரியும் விண் ணப்பங்களில் கையெழுத்து வாங் கும் இயக்கத்தை நடத்தினார்கள்

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் 1985 பெண்கள் நாளில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வான்வெளியை இராணுவமயப் படுத்தலுக்கு எதிராகவும் உலகில் ஆயுத குவிப்புக்கு எதிராகவும் பொது மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகவே அமைந்திருந் தது. பிரான்ஸ் - சுவிஸ் - மேற்கு ஜேர்மனி எல்லையில் நடந்த ஈஸ் டர் சமாதான அணிவகுப்பில்

பெருமளவான பெண் ஊழியர்கள் பங்கு கொண்டார்கள்.

டென்மார்க்கின் அரசியல் கட்சிகள் வருடா வருடம் மார்ச் 8 ல் சர்வதேசிய பெண்கள் நாளை நினைவு கூரும் முகமாக சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒரு வழமையாகும். 1985 ம் ஆண்டைய நிகழ்ச்சியில் 60 தொழிற் சங்கங்களும் பெண்கள் அமைப்புகளும் பங்கு கொண்டன. பெண்களின் ஜனநாயக கழகம் இதில் குறிப்பிடக்கூடிய தொன்றாகும். சமாதானம் வரும் வரை தமது நோக்கங்கள் நிறைவேற்றப்படமாட்டாது எனக் கூறும் டென்மார்க்கிய பெண்கள் அமைப்புகளும் தொழிற் சங்கங்களும் ஐரோப்பாவை அமெரிக்க அணுஆயுதஏவுகணைகளில் இருந்து விடுதலையாக்குவதே இதற்கான ஒரே வழி என்பதை அனைத்துக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும், ஆர்ப்பாட்டங்களிலும் முழங்கி வருகிறார்கள்.

நோர்வேயில் அணுவாயுதங்களுக்கு எதிரான பொதுமக்கள் இயக்கம் 300 பொது மக்கள் அமைப்புகளால் நடத்தப்படுகிறது. இதில் பெண்கள் குழுக்களும் உள்ளடங்குகின்றன. அரசாங்கத்திலும் பாராளுமன்றத்திலும் அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் நோர்வேயை அணு ஆயுத பிரயோகமற்ற வலயமாக ஆக்குவதே இவ் இயக்கத்தின் நோக்கமாகும். 1985 ல் சமாதானத்திற்கான பாட்டிகளின் இயக்கம் நோர்வேஜியன் பாராளுமன்றத்திற்கு முன்னால் வாராந்த ஆர்ப்பாட்டங்களை நடாத்தின.

''அணுவாயுத குவிப்பைநிறுத்து! இந்த அழகான பூகோளத்தை எமது பேரப் பிள்ளைகளுக்காக வைத்திருக்க அனுமதி!'' என்பதே அவர்களின் முழக்கங்களாக இருந்தன.

சுவீடனில், பெண்கள் குழுக்கள் ஐரோப்பிய பாதுகாப்பிற்காக மிக மூர்க்கமான இயக்கங்களை நடத்தி வருகிறார்கள். சமாதானத்திற்கும் சுதந்திரத்துக்குமான பெண்கள் சர்வதேசியத்தின் சுவிடிஷ் பிரிவும் ஏனைய போர் எதிர்ப்பு அமைப்புகளும் 1985 - 1986 ம் ஆண்டில் ஐ. நா. சபையின் அங்கத்துவ நாடுகள் அனைத்துக்கும் சமாதான குழுக்கள் அனுப்பப்பட வேண்டும் என்ற பிரேரணையை முன் வைத்தனர்.

பின்லாந்தில், பல பெண்கள் அமைப்புகளும் தொழிற்சங்க அமைப்புகளும் மேமாதம் 2 ம் கிழமையை சமாதானத்திற்கான கிழமையாக பிரகடனப்படுத்தியுள்ளன. ''ஹெல்சிங்கி உணர்வு இன்னமும் உயிர் வாழ்கிறது, ஏவுகணைகள் வேண்டாம், நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகளே அவசியமானது'' என்ற முழக்கங்களை முன்வைத்து கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்துகிறார்கள்.

தனது மண்ணில் [illegible]0 க்கு மேற்பட்ட அமெரிக்க, நேட்டோ இராணுவ தளங்களை கொண்டிருக்கும் கிறீசில் சமாதானத்திற்கான போராட்டத்தில் மேலும் அதிக எண்ணிக்கையான பெண்கள் பங்கு கொள்கிறார்கள். 1981 மேமாத பிற்பகுதியில் நடந்த சமாதானத்திற்கான பத்துநாள் நடவடிக்கையின்போது இடம்பெற்ற சமாதான அணிவகுப்பில் பல்வேறு கிரேக்க பெண்கள் அமைப்புகளும் பங்கு கொண்டன. அதேவேளையில் கிரேக்க தலைநகரில் பெண்களை போர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வைப்பதற்கான வட்டமேசை மாநாடு ஒன்றும் நடைபெற்றது. இதில் பெண்களின் ஜனநாயக சங்கம், கிரேக்க பெண்கள் சங்கம், கிரேக்க பெண்கள் சம்மேளனம், குடும்பத் தலைவிகளின் கிரேக்க நிறுவனம், கடற் தொழிலாளர் குடும்ப தலைவிகளின் நிறுவனம், போன்ற பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்கு கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் நோக்கம் சமாதான நடவடிக்கைகளிடையே ஒரு இணைப்பை ஏற்படுத்துவதும் பெண்களை இவ்விதமான நடவடிக்கைகளில் ஊக்குவிப்பதுவுமாகும். மாநாட்டிற்கு பங்கு கொண்டிருந்தோர் கிறீஸில் உள்ள இராணுவத் தளங்கள் குலைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய அதே வேளையில் மேற்கு ஐரோப்பாவில் அணுவாயுதங்கள் புதிய ஏவுகணைகள் நிறுவப்படுவதை இவர்கள் ஆட்சேபித்தார்கள்.

1960 களில் அமெரிக்கப் பெண்கள் வியட்நாம்போரை எதிர்ப்பதில் படுமுனைப்பாக ஈடுபட்டார்கள். இன்று இம்சைப்படுத்தலுக்கும் அவமானப்படுத்தலுக்கும், இராணுவ பிரசாரத்துக்கும் கருத்தியல் வேறுபாடுகளுக்கும் மத்தியிலும் கூட அமெரிக்கா உட்பட அனைத்துத் தேசங்களுக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும் ஆயுதபோட்டா போட்டிகளையும் போர் தயாரிப்புகளையும் கண்டித்து இயக்கங்கள் நடத்துவதில் அமெரிக்க பெண்கள் அமைப்புகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

1982, யூன் மாதம் நியூயோர்க் நகரத்தில் நடைபெற்ற லட்சக் கணக்கானவர்கள் பங்குகொண்ட போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் 1983 ஆகஸ்டில் வோஷிங்ரனில் நடந்த அதே ஆர்ப்பாட்டத்தில் பல இலட்சக்கணக்கானோர் பங்கு கொண்டமையும்அமெரிக்கப்பெண்களின் அதிகரித்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டுகின்றது. சுரண்டலில் இருந்தும், ஒடுக்கு முறையில் இருந்தும் இராணுவ பயமுறுத்தலில் இருந்தும் சுதந்திரத்தைக் கோருதலே ஆர்ப்பாட்டங்களின் நோக்கமாய் இருந்தது.

1983, மே 8 ம் திகதி தாய்மார் தினத்தைக் கொண்டாடு முகமாக பெண்கள் அமைப்புகள் முப்பதுக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். 1983, ஜூலை 30 ம் திகதி ஆயுத குவைப்புத் தினத்தை கொண்டாடு

முகமாக நாடு பூராகவும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஹிரோஷிமாவிலும் நாகாசாகியிலும் அணு குண்டுக்குப் பலியானவர்களை நினைவுகூரும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

1983 ல் அமெரிக்கப் பெண்கள் பிரித்தானிய பெண்களின் உதாரணத்தைப் பின்பற்றி சமாதான முகாம்களை நிறுவினார்கள். நியுயோர்க் மாநிலத்தைச் சேர்ந்த பெண்கள் அமைப்புகள் சில செனிக்க போல்ஸ் இராணுவ தளத்திற்கு முன்னால் சமாதான முகாமிட்டார்கள். இங்குதான் பெரிஸ்க்ஷ- 2 ஏவுகணைகள் இருப்பில் வைக்கப்பட்டிருந்தன. கலிபோனியா, வோஷிங்ரன், ரெக்ஸாஸ் ஆகிய மாநிலங்களில் விண்வெளியை இராணுவ மயப்படுத்தும் அமெரிக்க அரசாங்கத்தின் திட்டத்தை கண்டித்து பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கனடாவில், பல பெண்கள் அமைப்புகள் போர் எதிர்ப்பு போராட்டத்தையே முதன்மையான நடவடிக்கையாக ஏற்றிருந்தார்கள். அவர்களின் நடவடிக்கைகள் எமது காலகட்டத்தின் அவசியத்தை ஒட்டிய கோரிக்கைகளை தழுவியதாய் இருந்தது. அவையாவன, கனடாவை அணுவாயுதமற்ற பிராந்தியமாக ஆக்க வேண்டும், நேட்டோவில் இருந்தும் நொறாட்டில் இருந்தும் கனடா விலகிக் கொள்ளவேண்டும், அமெரிக்க போர்க்கப்பல்களின் பரிசோதனை வலயத்துள் கனடா இருக்கும் நிலை நிறுத்தப்படவேண்டும், வோர்ஷோ ஒப்பந்தமும் நோட்டோவும் சமகாலத்தில் கலைக்கப்பட வேண்டும். ரொறன்ரோவில், கனேடிய பெண்களின் காங்கிரசையும் உள்ளடக்கிய பெண்கள் அமைப்புகளின் கூட்டணி சமாதானத்திற்கான இயக்கங்களை நடத்தினார்கள். ''சமாதானம், சமத்துவம், ஐக்கியம்'' ''ஆயுத செலவீனத்தை நிறுத்துக! எமக்குத் தேவை தொழில் வாய்ப்புகள், குண்டுகளல்ல.'' போன்ற முழக்கங்களை (சுலோகங்கள்) முன்வைத்தார்கள்.

1983 டிசம்பரில் பெண்கள் அமைப்புகளின் முன்னணி அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் தொடர்ச்சியான பல ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

1981, நவம்பரில் அணு ஆயுதங்களை முற்றாக தடைசெய்யக் கோரி மக்கள் இயக்கத்திற்கான ஜப்பானிய இணைப்புச்சபை ஒன்று அமைக்கப்பட்டது. இது ஒரு பிரமாண்டமான வெகுஜன அமைப்பாகும். இதன் ஆட்சிக் குழு 24 அமைப்புகளைக் கொண்டது. நான்கு அமைப்புகள் பெண்கள் அமைப்புகளாகும் அரசாங்கத்தின் பல தடைகளுக்கு மத்தியிலும் இவ் இயக்கம் தொடர்கிறது.

1984 ஜூன் மாதத்தில் தொழிற் சங்கங்களின் பொதுச் சபையும், ஜப்பான் ஆசிரியர் சங்கமும், புதிய ஜப்பானின் பெண்கள் கவுன்சிலும் இணைந்து ரோக்கியோவில் மாபெரும் பேரணி நடத்தினார்கள் ''எமது குழந்தைகள் ஒரு சமாதான ஜனநாயக நாட்டிலேயே வளரவேண்டும்.'' ''அமெரிக்கா மூழ்கடிக்கப்படமுடியாத விமானந் தாங்கி கப்பல்களின் சிப்பந்திகளாய் தொழில் புரியும் புதிய ஜப்பானிய பரம்பரையினரை வளர்க்க நாம் சம்மதியோம்.'' என்பனவே அப்பேரணியின் முகப்பு மேற்கோள் வாசகமாக இருந்தது.

1984 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சுமார் 6,000 பெண்களும் குழந்தைகளும் யுகோசுகாவின் அருகில் உள்ள அமெரிக்க விமானத் தளத்தின் முன்னால் பேரணி நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து அதே ஆண்டு மே மாதம் அதே நகரத்தில் ஆசியாவிலும், பசுபிக்கிலும் அணுவாயுத ஏவுகணைகள் நிறுவப்படுவதற்கு எதிராக உலக மாநாடு ஒன்று நடைபெற்றது.

1983 ம் ஆண்டு நவம்பர்மாதம் உயிர் வாழ்வதற்கான பெண்கள் அமைப்பு பைன்கப்பில் (Pine Gap) உள்ள அமெரிக்க தளத்திற்கு முன்னால் முகாமிட்டார்கள். அவுஸ்ரேலியாவில் உள்ள 30 பலமிக்க அமெரிக்க தளங்களில் இதுவும் ஒன்றாகும். நவம்பர் 11 ம் திகதி இந்த முகாமைத் திறந்து வைப்பதற்காக ஒரு பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அப்போது பொலிசாரின் அடாவடித்தனம் நடைபெற்றதுடன், 130 பேர் சிறைப் பிடிக்கவும் பட்டார்கள். ஆனாலும் தீர்மானித்தபடி தீர்மானித்த திகதியில் முகாம் திறக்கப்பட்டது. தமது நாட்டை அமெரிக்க இராணுவ கட்டமைப்பின் மாற்றும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து 1984 ம் ஆண்டு அவுஸ்ரேலிய பெண்கள் மற்றோர் முகாமை கொக்பேர்ன் சவுண்டில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளத்திற்கு முன்னால் நிறுவினார்கள்.

-மொழி பெயர்ப்பு ஏ. ஜி. கே.

---

"செல்வத்தை உண்டாக்காமல் நுகர உரிமை கிடையாது. அதுபோல, இன்பத்தை உண்டாக்காமல் அதனை நுகர முடியாது."

— பெர்னாலட்ஷா

---

## புதிர்கள்–விடை

1) முருங்கை

2) சோளம்

3) வேம்பு

4) ஆடும் கீரையும்

# ஒரே கேள்விகள் மூவர் பதில்கள்

பெண் விடுதலையோடு தொடர்புடைய ஐந்து கேள்விகளை வெவ்வேறு நிலைப்பட்ட மூன்று பெண்களிடம் கொடுத்து பதில் தருமாறு வேண்டினோம். ஒவ்வொருவரும் சுயமாக தத்தமது கோணங்களில் பார்வையினைச் செலுத்தி அதற்கான பதில்களை சாளரத்திற்கு வாழங்கியுள்ளனர்.

**திருமதி. சுந்தரலக்சுமி யோகநாதன்**

இவர் உத்தியோகத்திற்கு செல்லாத ஓர் பெண்மணி இரண்டு பிள்ளைகளுக்குத் தாய்.

**திருமதி. கமலா குணராசா**

இவர் ஆசிரியையாக உத்தியோகம் செய்பவர் மூன்று பிள்ளைகளின் தாய்.

**செல்வி. கண்ணம்மா (ஜூலி)**

இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த பெண் போராளி

## கேள்விகள்

1. பெண் மீதான அடக்கு முறைகள் நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுகின்றன. எமது சூழலில் பெண்மீதான அடக்குமுறை என்பது எவ்வாறானதாகவுள்ளது?

2. எமது பெண்கள் மீதான அடக்குமுறை ஆணாதிக்க நடவடிக்கைகள் மூலமாகவா ஒட்டு மொத்தமான சமூக நடவடிக்கைகள்மூலமாகவா ஏற்படுத்தப்படுகின்றன?

3. பெண்கள் தொழில் புரிவதால் மட்டும் தங்கு நிலை வாழ்விலிருந்து மீள முடியுமா?

4. சீதனக்கொடுமை நீங்க என்ன செய்யலாம்?

5. அடக்கு முறைகளிலிருந்து பெண்கள் விடுதலை பெற எவ்வாறானதோர் போராட்டம் தற்போது அவசியமாகிறது?

**பதில்கள் 1**

**திருமதி. சுந்தரலக்சுமி யோகநாதன்**

1. அடக்குமுறை என்பதே அறியாமையின் ஒரு மாற்றுமுகமாகும். இதிலும் பெண் அடக்குமுறை என்பது ஒருபடி மேலாகச்சென்று அறியாமையின் முழு வடிவமாகி விடுகிறது. இந்த அறியாமை எமது சூழலைப்பொறுத்த வரை முற்றுமுழுதாக அகன்று விடவில்லை என்றே கூறலாம். உதாரணமாக எமது சூழலில் குறிப்பாக வீடுகளில் பெண்களின் கருத்துகள், அவர்களின் ஆலோசனைகள், பெரும்பாலும் செயல் வடிவம் பெறுவது என்பது ஆண்களின் ஒத்துழைப்புடனேயே பெற்றுக்கொள்ளப்படுகிறது. இங்கு பெண்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை வெளிப்படையாக செயற்படுத்த முடியாதிருக்கிறது.

மேலும் எமது சூழலைப் பொறுத்த வரையில் சில முன்னேற்றமடையாத கிராமங்களிலேயே பெண்கள் மீதான அடக்குமுறைகள் விரிவான தமது வடிவத்தைக் காட்டுகின்றன.

தனது கணவன் எத்தகைய தீயசெயல்களில் ஈடுபட்டாலும் அதை தட்டிக்கேட்கும் சுதந்திரம் எத்தனை பெண்களுக்கு இன்று இருக்கிறது? அப்படித்தான் தட்டிக்கேட்டுவிட்டாலும், அந்தச் சமூகம் அவளுக்கு ஒரு சிறப்புப்பெயரை சூட்டிவிடும். அதுதான் ''கணவனுக்கு அடங்காத மனைவி'' என்ற பெயர்.

இவற்றைவிட கல்வி, வேலைவாய்ப்புகள் போன்ற பல துறைகளிலும் இந்தச்சமூகத்தால் பல அடக்கு முறைகள் பெண்கள் மீது சுமத்தப்பட்டுவருகின்றன.

எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும், சிலர் தங்கள் பெண்களை ஒரு குறிப்பிட்ட வயதின் பின் பாடசாலைக்கோ அல்லது பல்கலைக்கழகத்திற்கோ செல்ல அனுமதிப்பதில்லை. காரணம் கேட்டால், ''பெண்பிள்ளைகளுக்கு ஏன் நிறையப்படிப்பு'' என்று சமாதானம் கூறுவார்கள்.

இன்னுமோர் பிரிவினர் இருக்கிறார்கள். அவர்கள் பெண்களை நன்றாக படிக்கவைத்து அவர்களுக்கு பெரிய உத்தியோகமும் ஏற்படுத்திக்கொடுப்பார்கள். அது தங்கள் எதிர்காலத்தை வளமாக்க- அப்பெண்ணின் உழைப்பையே தங்கள் எதிர்கால வாழ்விற்கு பயன்படுத்தத்திட்டமிட்டு அவளுக்கென்றொரு வாழ்வுண்டு என்பதை மறந்து அவளது வாழ்வையே அழிக்கும் பாமரர்கள்.

இவ்வாறாக பலப்பல அடக்குமுறைகள் எமது இன்றைய சூழலில் பெண்கள் மீது திணிக்கப்பட்டு வருகின்றன.

2. பெண்களின் மீதான அடக்குமுறைகள் பெரும்பாலும் ஆணாதிக்கநடவடிக்கை சார்ந்ததாகவே இருந்தபோதும், இந்த 'ஆணாதிக்கம்' என்பது எங்கிருந்து உருப்பெறுகிறது என சற்று நாம் சிந்திக்கவேண்டும். உதாரணத்துக்கு நாம் ஒரு சிறிய சமூகத்தையும், அதில் வாழும் ஒரு சிறுவனையும் எடுத்துக்கொள்வோம். அந்தச்சமூகத்தில் ஒரு பெண் நன்றாகப் படித்து நல்லதொரு வேலையையும் பெற்றுவிட்டாள். சில நாட்கள் கழிந்துவிட்டன, அவள் தனக்கென ஒரு மோட்டார் சைக்கிளையும் வாங்கினாள். அதிலேயே வேலைக்கும் செல்லத் தொடங்கினாள். இவ்வளவையும் அந்தச்சிறுவன் கவனிக்கிறான். அந்தப் பெண்ணைப்பற்றி, அவனது வீட்டில் அன்று அவனது தாயும், பாட்டியும் கதைக்கிறார்கள். அவன்கேட்கிறான். அந்தப் பெண் அவ்வளவு படித்ததும் இப்படி வேலைபார்ப்பதும், மோட்டார் சைக்கிளில் போவதும் ஒரு அடக்கமான குடும்பப்பெண்ணுக்கு அழகல்ல என்ற ரீதியில் அவர்களின்பேச்சு அமைகிறது. அதைக் கேட்ட அந்தச் சிறுவன் மனதிலும் அப்பெண்ணின் அச் செய்கைகள் பிழை என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. அதுவே பெண்மீது அடக்குமுறைகளை பிற்காலத்தில் மேற்கொள்ள அவனுக்கு தூண்டுகோலாகவும் அமைந்துவிடுகிறது.

எனவே பெண் அடக்குமுறைகள் முற்றுமுழுதாக சமூக நடவடிக்கைகளிலேயே ஏற்படுத்தப்படுகிறது. ஆணாதிக்கநடவடிக்கைகள் உருப்பெறவும் சமூகமே முழுப் பொறுப்பாளியாக இருக்கின்றது.

3. தொழில்புரிவதால்மட்டும் ஒரு பெண், ஆணில் தங்கி வாழும் நிலையை வென்றுவிட்டாள் என்று கூறமுடியாது. இன்று எத்தனையோ பெண்கள் வேலை செய்ததும், தாம்பெறும் ஊதியத்தை முற்றுமுழுதாக கணவனிடமே ஒப்படைத்துவிட்டு எல்லாவற்றிற்கும் அவர்களை எதிர்பார்க்கிறார்கள். எனவே தொழில் புரிவதால் மட்டும் ஒரு பெண் தங்குநிலை வாழ்விலிருந்து மீள முடியாது. அதற்கு அவளுக்கு தெளிந்த சிந்தனையும், கலங்காத மனமும் மிகவும் அவசியம். பண்பாடு என்னும் கோலத்தினுள் வாழ்ந்தாலும், அடிமையாகவே நடத்தப்படும் கேவலமான நிலை அப்போதுதான் உடைத்தெறியப்படும்.

4. ''சீதனம்'' என்பது பண்டைக் கால மக்களால், தமது பெண்களை மணக்கும் ஆண்களுக்கு வழங்கப்பட்ட ஒரு திருமணப் பரிசாகவே விளங்கியது, ஆனால் இன்றைய ஆண்களுக்கோ, அது அவர்களின் வாழ்விற்கு அல்லது அவர்களின் வீட்டாரின் வாழ்விற்கு அவர்களின் மனைவியர் கொண்டுவரும் ஒரு முதலீடாகி விட்டது.

தன்னம்பிக்கையற்றவர்களும், சொந்த உழைப்பில் நம்பிக்கையில்லாதவர்களும், இந்த சமூகப் பயிரிலேகளைகளாக இருக்கமட்டும் ''சீதனக்கொடுமை ஒழிப்பு'' என்பது ஒரு கேள்விக்குறியாகவே விளங்கப்போகிறது.

5) ஒரு சமூகத்தின் உதயத்திற்கு மூலகாரணமே பெண்கள்தான் என்பதை மிக இலகுவாக உணரமுடியும். எனவே இந்த சமூகத்தில் வாழும் ஒவ்வொரு பெண்ணும், தனது முக்கியத்துவத்தை, தனது பெருமையை ஒரு கணம் சிந்தித்து தெளிவார்களாயின் அந்தத்தெளிவே அந்தத் தெளிவின் மூலம் பிறக்கும் மன உறுதிப்பாடே, தம்மீதான அடக்குமுறைகளை தகர்த்தெறிய உதவும் ஒருகருவியாக அவர்களுக்குப்பயன்படும். இக்கருவியை வைத்துக் கொண்டே இந்தச்சமூகத்திலேதன் மீது பிணைக்கப்பட்டிருக்கும் அடிமை விலங்கை உடைக்க முடியும் ஒருஉத்வேகமான, மனோரீதியான போராட்டத்தை நடாத்திச்செல்ல அவர்களுக்கு வழியேற்படும்.

□□□

**பதில்கள் 2**

**திருமதி. கமலா குணராசா**

1. உலக நாடுகள் யாவற்றிலும் ஏதோ ஒரு வகையில் பெண் மீது ஆண் ஆதிக்கம் செலுத்தும் நிலைதான் காணப்படுகிறது. இந்நிலைக்கான காரணம் உடற்கூற்று ரீதியில் ஆண் வலிமையுள்ளவனாக இருப்பதனால் இயற்கையாகவே ஆணுக்கு பெண் மீது ஆதிக்கம் செலுத்தும் தன்மையுண்டு. உதாரணமாக கணவன் மனைவி என்ற உறவில் மட்டுமன்றி உத்தியோக ஸ்தாபனங்களில் ஆண் அதிகாரி பெண்மீது ஆதிக்கம் செலுத்துவதையும் காணக் கூடியதாகவுள்ளது. இவ் ஆதிக்க உணர்வு கீழைத் தேசங்களில் குறிப்பாக இந்தியாவில் மிகு நிலையிலுள்ளது. புராதன காலந்தொட்டு இன்றுவரை இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையேயுள்ள சமூக பண்பாட்டு

கலாசாரத் தொடர்பு காரணமாக இலங்கையிலும் ஆணின் அடக்கு முறை சமூகத்தில் காணப்படுகிறது. இதற்கு எமது குடும்ப வாழ்க்கை முறைதான் காரணமென்பது எனது அபிப்பிராயம். பெண் சிறு பிராயத்தில் தந்தையினால் குடும்பம், பழக்க வழக்கம் என்ற போர்வையால் கட்டுப்படுத்தப் படுகிறாள். பின்னர் அவள் திருமணத்தின் போது சீதனம் என்ற கொடுமையால் அடக்கப்பட்டு கணவனால் ஆதிக்கம் செலுத்தப் படுகிறாள். இதற்கு முக்கிய காரணம் தங்கிவாழும் நிலையில் இன்னும் பெண்கள் இருப்பதுதான். இன்று ஓரளவு இந்நிலையை வேலைபார்க்கும் பெண்கள் முறியடித்து வருகிறார்கள். இலங்கையில் பெண்களில் அநேகமானோர் படித்தவர்களாகவுள்ளனர். இன்று 67% பெண்கள் படித்தவர்கள் 28% தொழில் பார்ப்போராகும். இருபதாம் நூற்றாண்டின் கடைசி தசாப்தமான இக்கால கட்டத்தில் பெண் படித்தவளாக இருப்பதால் மறுக்கப்படும் உரிமைகளைப் போராடிப் பெறும் ஆற்றல் படைத்தவர்களாக எம் தமிழீழப் பெண்கள் காணப்படுகிறார்கள். இதிலிருந்து ஆண் ஆதிக்கம் இலங்கையில் மிகக் குறைவு என்பது தெளிவாகிறது.

ஆயினும் திருமணத்தின் போது பெண் மீதான அடக்குமுறை சம்பிரதாய வழக்கங்களால் தொடர்கிறது. எந்தவொரு பெண்ணும் தன்னிலும் கல்வி, வயது என்பனவற்றில் கூடிய ஒருவனையே விரும்புகிறாள். இது தனக்கு தானே ஆதிக்கத்தை விரும்புவதாகும். இந்நிலையையும் சில பெண்கள் முறியடிக்கிறார்கள். படித்த பட்டதாரிப் பெண் சாதாரண O/L படித்த வாலிபனை வெளிநாட்டில் வேலை பார்ப்போன் என்ற ஒரு அந்தஸ்திற்காக திருமணம் செய்கிறாள் இதனால். ஆணின் ஆதிக்கம் குறைக்கப்படுகிறது. இன்னும் சில ஆண்டுகளில் பெண் மீதான ஆணின் அடக்குமுறை அற்றுப் போகும் நிலைவரும்.

முடிவாக பெண் தனித்துவாழ முடியாத சமூக அமைப்பும் பெண்ணைஆண்ஆதிக்கம்செலுத்த வழி வகுக்கிறது.

2. பெண் மீதான அடக்குமுறை வலிமைத் தத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆண்கள் ஏற்படுத்திய அடக்குமுறைகள் காலப் போக்கில் சமூக நடவடிக்கைகளாக மாற்றப்பட்டன. சமூகக் கட்டுக்கோப்பு எனும்போது சகலரும் கட்டுப்படுவர் என்பது அவை வலிந்து சமூக நடவடிக்கைகளாக மாற்றப்பட்டுள்ளன. சில ஆண்கள் தமது வலிமை (அந்தஸ்து) காரணமாக பெண்ணைப் போகப் பொருளாக நடத்தும் நிலையுண்டு. இதற்குத் துணையாகவுள்ளது சமூக அமைப்பு பெண்ணுக்கு மட்டும் கற்பு, ஒழுக்கம், தாய்மை என்ற பண்புகள் இருத்தல் அவசியம். ஆணுக்கு அவை தேவையில்லை. ஒழுக்கம் தவறியவள் சமூகத்தில் அவமதிக்கப் படுகிறாள். ஆனால் ஒழுக்கமற்ற ஆணை சமூகம் வேறு பிரிப்பதில்லை.

வேலை பார்க்காத பெண் முதலில் கணவனுக்கு பணிவிடை செய்பவளாக ஆணால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறாள். பின் தனது ஆண் மக்களுக்கு பணிவிடை செய்து அவனது தயவில் வாழவேண்டிய நிலையில் இருக்கிறாள். எனவே இந்நிலையை பெண் தங்கிவாழும் போது ஆண் ஏற்படுத்தி இன்று சமூகநடவடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது. ஆயினும் இலங்கையில் பெண்கள் ஆணுக்கு சரிநிகர் சமமானமாக கல்வி, உழைப்பு என்பனவற்றில் ஈடுபடுவதால் சமூக நடவடிக்கைகள் உடைத்தெறியப் படுகின்றன. இன்று பெண் சமூகக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது. உ+ம் குடும்பப் பெண் இன்று சைக்கிளில் தொழில்பார்க்கச் செல்வது மட்டுமன்றி குடும்பப்பெண் சைக்கிளில் தனது குழந்தையை பாடசாலைக்கு கொண்டு செல்வதும் சந்தைக்குச் செல்வதையும் காண்கிறோம். ஆயினும் பெண்ணுக்கு ஆண் தாலிகட்டும் சமூக வழக்கம் மீற முடியாத ஒன்று. உண்மையில் இவ் வழக்கத்தை ஆண்தான் ஏற்படுத்தினான். இவள் எனக்குரியவள் என்ற ஆதிக்க உணர்வு அது நாளடைவில் சமூக நடவடிக்கையாக்கப்பட்டு விட்டது. எனவே பெண்கள் ஆண்களினால் ஏற்படுத்திய அடக்குமுறை சமூக நடவடிக்கையுடன் பிணைந்தமையால் தானாகவே ஆணுக்குக் கட்டுப்படும் இயல்புடையவளாகவும் அவ் இயல்பிலிருந்து முற்றும் விடுபட முடியாதவளாகவே இருக்கிறாள்.

3. தொழில் புரிவதால் பெண்கள் தங்குநிலை வாழ்விலிருந்து முற்றாக மீளமுடியாது. தொழில் புரிவதால் கணவன் தனியாக பராமரித்த குடும்பத்தை பொருளாதார ரீதியில் தானும் பங்குகொள்கிறாள். இந் நிலையில் பெண்மீது ஆண் ஆதிக்கம் செலுத்தும் நிலையை குறைக்க வேண்டியுள்ளது. தொழில் புரிவதால் பல தரப்பட்டவர்களுடன் பழகுவதால் அறிவும் அனுபவமும் பெறுகிறாள். இதனால் தனது உரிமைகளைப் பெறுவதற்கு போராடும் மனப் பக்குவமும், ஆற்றலும் பெற்று அடக்கு முறைகளை வென்று சுதந்திரப் பெண்களாக இலங்கையில் வாழ்கிறாள்.

இன்று தொழில் பார்க்கும் பெண்கள் குடும்பத்திற்கு தான் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்தபின்னர் தான் தொழிலுக்கு செல்கிறாள் அங்கும் தனது கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும். எந்தவொரு ஆணும் தனது மனைவி தொழில் பார்ப்பதால் கஷ்டப்படுகிறாளென வீட்டு வேலைகளைச் செய்வதில்லை, குழந்தை பராமரிப்பு, சமையல், கணவனைப் பராமரித்தல் என்பவற்றை அவளே செய்கிறாள். பெண் குழந்தை பெறும் இயந்திரம் என்ற நிலையிலிருந்து மட்டுமே விடுபட்டுள்ளாள்.

திருமணத்தை எடுத்துக் கொண்டால் தொழில் பார்க்கும்பெண்கள் இதிலிருந்து விலக்களிக்கப்படுவ

தில்லை. அவர்களுக்கும் ஏனைய பெண்களுக்குள்ளசீதனத்தடைஇருக்கத்தான் செய்கிறது.படித்துதொழில் பார்ப்பதால் தன்னிலும் உயர்ந்த தகுதியுடையவன் கணவனாக வரவேணடும் என்ற சமூக வழக்கிற்குள் திரும்பவும் அவள் தானாகவே வந்து விழுகிறாள். தனது கணவன் தனது பிள்ளைகள் என்ற குடும்பக் கட்டுக்கோப்பினுள் தன்னைப் பிணைத்து தானாகவே அடக்கு முறைக்கு ஆளாக்கப் படுகிறாள். எனவே தொழில் பார்ப்பதால் எல்லாப் பெண்களும் தங்குநிலையிலிருந்து விடுபடுவதில்லை விடுபட்டு சுதந்திரமாக திருமணம்செய்யாது வாழும் பெண்களும் எம்மவரில் இல்லையென்றில்லை.

4 இந்தியாவில் காணப்படுவது போன்ற சீதனக் கொடுமை இலங்கையில் இல்லையென்றாலும் இன்றும் இதனால் துன்பப்படுவோர் தொகை குறையவில்லையென்றே கூற வேண்டும். இது ஆண்களும் பெண்களும் சேர்ந்து சீதனம் வாங்குவதில்லையென்று முடிவு எடுத்தாலும் குடும்பம் என்ற சமூக அமைப்பு இவர்களுக்கு விடுதலையளிப்பதாகவில்லை. உ+மாக வெளி நாட்டில் ஒரு ஆணும் பெண்ணும் விரும்பித் திருமணம் செய்த பின்னும் இங்கு இருவரது பெற்றோரும் சீதனம் பேசிப் பரிமாறும் நிலை காணப் படுகிறது. எனவே இது சமூகத்தில் புரையோடிப் போன ஒரு புண்ணாகும். இதனை மாற்றக் கூடிய மருந்து சீதனம் வாங்குவது சட்டப்படி குற்றம் என சட்டம் கொண்டு வரப்படுதலாகும்.

என்று ஆண்களை விலை கொடுத்து பெண்கள் வாங்குகிறார்கள் என்பதை ஆண்கள் உணர்கிறார்களோ அன்றுதான் இந்நிலை மாறும். பலலட்ச ரூபாய் இனாம்கொடுத்து விலைக்கு வாங்கும் பெண் அந்த ஆணின் மீது ஆதிக்கம் செலுத்த முன் வந்தால் ஆதிக்கம் செலுத்தும் சீதனத்தை வெறுக்கும் நிலையை உருவாக்க முடியும். பெண்களும் தன்னிலும் உயர்வான ஒருவன் கணவனாக வேண்டுமென எதிர்பார்க்கும் மனப் பாங்கை மாற்றியமைக்க வேண்டும். இல்லறம் இனிதாகவும், இன்பமாகவும் அமைய அன்பும் பண்பும் தான் தேவை. மாறாக சீதனம் கொடுத்து உள்ளத்தால் இணைய முடியாது. இருவர் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டு இல்லற வாழ்வை சோபிக்காது போவதைக் காண்கிறோம்.

இலங்கையில் திருமணம் முடித்த பின் ஆண் பெண் வீட்டிற்குச் சென்று வாழ்வதும், பெண்ணுடைய தந்தையால் கொடுக்கப் பட்ட சீதனச் சொத்துக்களில் உரிமையுடையவனாக்கப்படுவதும் உண்மையில் ஆண்களுக்கு பெரும் இழுக்கு. இதனை எந்த ஒரு ஆணும் உணர்வதில்லை. (இதில் எனது கணவனைப் போன்ற கொள்கையுடையவர்கள் அடங்கமாட்டார்கள்) அந்த உணர்வு ஏற்படும் போதும் பெற்றார் அந்த உரிமையைக் கொடுக்காது விடும் போதும் சீதனக் கொடுமை நீங்கும்.

சமூகத்தில் பெண்கள் இவ் அடக்குமுறையை எதிர்த்து சீதனம் கொடுத்து திருமணம் செய்வதில்லை என ஒரு எதிர்ப்பு அணியை உருவாக்கிப் போராடினால்தான் இந்நிலையை மாற்ற முடியும்.

''சிறை காக்கும் காப்பவன்
செய்யு மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை''

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க கணவனின் தயவில் தான் பெண் சிறந்தவளாக வாழமுடியும் என்ற நிலையிலிருந்து விடுபட்டு தமது உரிமைகளை வென்று வாழ்ந்து காட்டுதல் வேண்டும்.

5, முதலில் பெண்கள் தாம் ஆண்களிலும் தரம் குறைந்தவர்கள் என்ற மனப்பாங்கிலிருந்து விடுபட்டு, சமூகத்தில் தமக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை தாமாகவே பெற்று கட்டுப்பாடுகளை களைந்தெறிய வேண்டும்.

நாட்டிலுள்ள சகல துறைகளிலும் தாம் ஆண்களுக்கு தாழ்ந்தவர்கள் இல்லை என்ற நிலையை செயலில் காட்டுதல் வேண்டும். உ+மாக பெண்கள் நாட்டின் விடுதலைக்காகப் போராடுவதை முன் மாதிரியாகக் கொண்டு குடும்பம் என்ற சிறு வட்டத்தினுள் தனது திறமைகளை வீணே மழுங்கடிக்காது வெளியுலகில் தான் ஆற்ற வேண்டிய சேவைகளை மனதில் கொண்டு குடும்ப அடக்கு முறையிலிருந்து விடுபடல் வேண்டும்.

சமூக பழக்கவழக்கங்கள் என்ற மூட நம்பிக்கைகளை தொடர்ந்தும் பெண்களே வளர்க்காது அவற்றை மாற்றியமைக்க வேண்டும். உ+ம் விதவைகள் மறுமணம், விதவைகளை சமூகத்தில் தனிமைப்படுத்தாது சுபகாரியங்களில் ஈடுபடுத்தல் என்பவற்றை நடைமுறைப் படுத்தல்.

ஒவ்வொரு பெற்றோரும் பெண் பிள்ளைகளை அடக்கி வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்த்தால் தான் பெண் ஒழுக்கமுள்ளவளாக வளர்வாள் என எண்ணுகின்றனர். ஒழுக்கம் வேறு அடக்குமுறைவேறு என்பதை இளம் தலைமுறையினர் பெற்றோருக்குப் புரிய வைக்க வேண்டும். அதற்கு அவர்கள் தமது உரிமைகளை வலிந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

இனி வரும் தலைமுறையினரை உருவாக்கப் போகும் இன்றைய தலைமுறையினர் குடும்பத்தில் ஆண் பிறந்தால் குதூகலிப்பதையும் பெண் பிறந்தால் சலிப்படைவதையும் மறக்கவேண்டும். ஆண் பிள்ளைகளது சலுகைகளையும் நிறுத்தவேண்டும் உணவில் ஆண் பிள்ளைக்கு அளிக்கும் முதலிடம் காலப்போக்கில் ஆணுக்கு ஆதிக்க வலிமையை வளர்க்கும்வித்துக்கள். இவ் விதையை முளையிலேயே கிள்ள குடும்பத்தில் சம அந்தஸ்துடன் பெண்ணை வளர்க்க வேண்டும். குடும்பச் சொத்தில் பெண்ணுக்கும் உரிமையளிக்க வேண்டும்.

எனவே எனது அபிப்பிராயப் படி ஒவ்வொரு குடும்பமும் தங்கள் குடும்பத்திலுள்ள ஆணின் அடக்கு முறைகளை வென்றால் அது நாட்டின் அடக்குமுறைகளை வென்றெடுப்பதற்கு சுலபமான வழியைத் தேடிக் கொடுக்கும். எனவே பெண் தனது அடிப்படை உரிமைகளை முதலில் பெறுவதற்குப் போராடி அதில் வெற்றி பெறல்வேண்டும்.

கண்ணம்மா (ஜூலி)

பெண் ஒடுக்குமுறை என்பது ஓர் உலகம் தழுவிய பிரச்சினையாகும். இவை ஒவ்வொரு நாட்டிலும் அந் நாட்டின் கல்வியறிவு சமுதாய வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் சமூகத்திற் பெண்களின் விகிதாசாரம் என்ற பல்வேறு காரணிகளின் தன்மைக்கேற்ப ஒடுக்குமுறையின் பரிமாணங்கள் வேறுபட்டிருக்கும்.

மூன்றாம்உலக நாடுகளில் பெண் ஒடுக்குமுறை வடிவங்களிலிருந்து சற்று வேறுபட்டதாக ஓரளவு பெண் சமுதாயம் விடுதலைப் பாதையில் செல்லும் நிலையினை இங்கு காணக்கூடியதாக உள்ளது எமது சமுதாயத்தில் பெண்களின் கல்வி முற்னேற்றமும் பெண்கள் பல்துறைத் தொழில்களிலும் பங்கேற்கும் நிலைப்பாடும் கூடுதலாக உள்ளது. இதனால் இந்தியா பங்களாதேஷ் போன்ற நாடுகளை விட ஒடுக்குமுறையின் தன்மை குறைவாகவே காணப்படுகின்றது.

எனினும் சமுதாயத்தின் புரையோடிப்போன மதச் சம்பிரதாயங்கள், மூடப் பழக்க வழக்கங்கள் என்பவற்றின் எச்ச சொச்சங்களை கல்வியறிவில் வளர்ச்சி கண்ட பலரும் இன்றும் இறுகப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். விதவைகள் மறுமண மறுப்புபோன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்

சீதனப்பிரச்சினை இங்கு ஆழமாக வேரூன்றிய ஒரு பிரச்சினையாகும். பிரதேசரீதியாக இவ் ஒடுக்குமுறையின் தன்மை வேறுபட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இது முக்கிய பிரச்சினையாக உள்ளது.

மேலும் சார்ந்து வாழுதல் என்ற பிரச்சினை எமது பெண்கள் சமுதாயத்தில் இன்னமும் காணப்படுகிறது. பெண்கள் தனித்து வாழ முடியாமல் கணவன், பெற்றோர் என்ற உறவுகளின் கட்டுப்பாட்டிற்குள்ளே கருத்துச் சுதந்திரமற்ற நிலையிலேயே வாழும் நிலை உள்ளது. அத்தோடு குடும்பத்தில் பெண்கள் தொழில் பார்த்தாலும் அவளிடமே முழு குடும்ப வேலைப் பழுவும் சுமத்தப்படுகிறது.

மற்றும் சில பின்தங்கிய கிராமங்களில் பெண்கள் ஒடுக்குமுறை காரணமாக கல்வி அறிவைப்பெறவில்லை. இந்நிலையில் கல்வியறிவு மூலம் அதனால் பெண்கள் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் அகப்புரட்சி ஏற்பட்டால் மட்டுமே பெண் விடுதலை பெறலாம். அத்தோடு எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்பது தேசிய விடுதலையோடு சமூக விடுதலையைப் பெற்றுக் கொள்ளும் ஒரு போராட்டமாகும். இப் போராட்டத்தின் மூலம் பெண்கள் சமுதாயத்தின் மத்தியில் பெண் விடுதலை பற்றிய ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

2 இன்று பெண் ஒடுக்குமுறை சமூக நடவடிக்கைகளோடுபின்னிப் பிணைந்து நிற்கின்றது. சமூகம் என்பது ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்ற ஒரு மக்கள் கூட்டமாகும். எனவே பெண்கள் மீதான ஒடுக்குமுறை ஆணாதிக்கம் மூலமாக மட்டும் ஏற்படாது பெண், ஆண் என்ற இருபாலராலும் ஏற்படுகின்றது. உதாரணமாக சீதன ஒடுக்குமுறை ஒரு ஆண் திருமணம் செய்யும்போது பெண் வீட்டாரிடம் பெற்றுக்கொள்ளும் சீதனமானது. அவ்வாணின் சகோதரிக்கோ அல்லது அவ் ஆணின் குடும்ப தேவைக்காகவே பெறப்படுகின்றது

3. தொழில் புரிவதால் மட்டும் தங்குநிலை வாழ்வில் இருந்து மீள முடியாது. பெண்களின் தங்குநிலை வாழ்க்கை காலாதிகாலமாக தொடர்ந்து வருகின்றது. இது ஓர் ஒட்டுமொத்தமான சமுதாயப் பிரச்சினை என்பதால் சமுதாயத்திலே மனப்புரட்சி ஏற்பட்டு சமுதாயத்தில் பெண்கள் தனித்து வாழமுடியும் என்ற மனப்பக்குவத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு ஏற்படவேண்டும்.

மற்றும் பெண்கள் சுயமாக தமது முடிவுகளை எடுக்கக்கூடிய மனநிலையை வளர்க்க வேண்டும். குடும்ப உறவுகளிலே புரிந்துணர்வு ஏற்படவேண்டும்.

4. சீதனம் என்பது ஒரு சமூகக் கொடுமை என்பதையும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் பற்றி மக்கள் நடுவில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

சீதனம் கொடுக்கும் வாங்கும் மனிதர்கள். மனிதத்தன்மை அற்றவர்கள் என்றஉணர்வை ஏற்படுத்த வேண்டும்.

எமது கையில் அரசு இல்லாத நிலையில் பிரச்சினைகளை தீர்க்கும் இணக்க மன்றுகள் சீதன கொடுக்கல் வாங்கல் வழக்குகளில் சீதனம் வாங்குவோருக்கு, சார்பற்ற முறையில் தீர்ப்பை வழங்கும் முறையை நடைமுறைப்படுத்தலாம். எமக்கொன்றொரு அரசு இருக்கும் போது இப்பிரச்சினை தீர்க்க உறுதியாக நடவடிக்கை எடுக்கலாம்.

5 எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களினது கணிசமான அதிகரிப்பு ஏற்பட அதன் மூலம் பெண்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டு சமூக விடுதலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

# ஓவியம் ⇄ வாக்கியம்

